513



# "சித்தன்"

ஓர் மாதாந்தப் பத்திரிகை.


| மாலை 1. | அக்டோபர் 35. | மணி 10. |
|---|---|---|
| Vol. 1. | October 35. | No. 10. |


உள்ளுரை. பக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | இரண வைத்தியம் ... ... | 335 |
| 2. | நடுவெழுத்தலங்காரம் .... ...., | 339 |
| 3. | செய்யுள் பகுதி .... ... | 340 |
| 4. | நவீன அகராதி ... ... | 341 |
| 5. | மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்கள் | 343 |
| 6. | கிராமத்தில் நமது வாழ்க்கை நிலை | 346 |
| 7. | கல்வி பரப்புதற்கேற்ற வழி ... | 351 |
| 8. | அஞ்சுகாவின் அன்பன் ... | 354 |
| 9. | பலதார மணம் ... ... | 362 |
| 10. | கைம்பெண் கன்னிகள் ... | 367 |
| 11. | குணவாகடம் ... ... | 369 |
| | [illegible]ம் ... ... | 373 |
| | [illegible]குதி ... ... | 375 |
| | [illegible]தகி ... ... | 377 |
| | [illegible] ... ... | 378 |
| | [illegible] ... ... | 383 |


JL
ஸ211, M35c N
M35·1·10
149923

ஆசிரியர் C. P. சாமி.

# "சித்தன்"

## ஓர் மாதாந்தப் பத்திரிகை.

கல்வி, கைத்தொழில், வியாபா[illegible]யம், வைத்தியம், சுகாதாரம் முதலிய அரிய [illegible]ரைகளுடனும், தமிழ் வைத்தியர்கட்கு பெரிதும் பயன்படும் விஷயங்களுடனும் ஆங்கிலத் திங்கள் தோறும் பழனியினின்றும் வெளி வருகிறது.

---

### சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு உள் நாடு | ... | ரூ. 0—8. |
| ,, வெளி நாடு | ... | ரூ. 1—0—0. |
| தனிப்பிரதி | ... | ரூ. 0—1—0 |

சந்தாத் தொகையை முன்னுபோல் செலுத்திவிடவேண்டும். வி. பி. யில் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. எப்போது சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அவ்வருட ஜனவரி மீ-முதல் கணக்கு வைக்கப்பட்டு, ஜனவரி-மீ சஞ்சிகை முதல் பத்திரிகை அனுப்பப்படும். பதில் விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவேண்டும்.

---

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| ஒரு தடவைக்கு முழுப்பக்கம் | | ரூ. 5—0—0, |
| ,, | அரைப்பக்கம் | ரூ. 3—0—0. |
| ,, | கால்பக்கம் | ரூ. 1—8—0. |

N. B:— நீடித்து விளம்பரஞ்செய்வோர் எமக்கெழுதித் தெரிந்துகொள்ளவும்.

விலாசம்:— மானேஜர்,

சித்தன்,

பழனி. S. I.

# "சித்தன்"

## பழனி.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்"

## மாதாந்தப் பத்திரிகை.

ஆசிரியர்— C. P. சாமி.


| மாலை 1. | அக்டோபர். 1935 | மணி 10. |
|---|---|---|


## இரண வைத்தியம்.

நம் தமிழ்வைத்தியமானது ஒப்புயர்வற்றது என்பதற்குப்போதிய சான்றுகள் பல உள. எனினும் தற்போதைய நிலையை எண்ணும்போது மிகவும் வருந்தத்தக்க நிலையில் தான் இருக்கிறது. ஆயினும் அறிவாளிகள் பலரின் முயற்சியால் தாழ்வுற்ற நிலையிலிருக்கும் நம் வைத்தியத்தைச் சிறப்புறச் செய்யவேண்டுமென்ற நோக்கங்கொண்டு ஆங்காங்கே வைத்திய மகாநாடுகள் கூட்டி, ஆண்டுதோறும் தமிழ்வைத்தியர்களின் குறைகள் நிவர்த்திக்கப்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றி அரசாங்கத்தாருக்கு அனுப்பி அவர்களின் ஆதரவுபெறும் வகையை நாடுகின்றனர். இம் முயற்சிக்காக அன்னவர்களைப் பாராட்டி அவர்களுடன் ஒத்துழைக்கவேண்டியது வைத்தியத்தொழில்புரியும் நம்போன்றவர்களின் கடமையாகும். நம் ஒத்துழைப்பால் நம் தமிழ் வைத்தியமானது நம் நாட்டில் உயரிய நிலையடைந்து முன் போல் பரவுமென்பதிற்சந்தேகமில்லை.

தமிழ் வைத்தியத்தின் ஒரு பிரிவாகிய இரணவைத்தியம் அல்லது சஸ்திர வைத்தியம் என்பதைப்பற்றி சொல்லப்புகுந்தது என்னவென்றால் தமிழ்வைத்தியமானது எப்படி மற்றய வைத்தியங்களுக்கெல்லாம் முதல்தரமாக, ஆதியாக இருந்ததோ அதுபோலவே இரணவைத்தியமும் பண்டைக் காலத்தில் யாவரும் பிரமிக்கும்படியான அற்புத சிகிச்சை முறைகள் அடங்கியதாயிருந்தது. ஆனால் காலதேசமாறுபாட்டாலோ அல்லது வேறு எக்காரணத்தாலோ நம் தமிழ் வைத்தியர்கள் இரண சிகிச்சையை சிரத்தையோடும் ஊக்கத்தோடும் கையாளுவதை விட்டுவிட்டபடியால் அதன்நிலை குன்றநேரிட்டு தற்போதய சீர்கேட்டை அடைந்துள்ளது. ஆயினும் பரம்பரையாய் இரணசிகிச்சை செய்துவந்த மரபிற்றோன்றிய சிலர் மட்டும் தமது அனுபவத்தை விட்டுவிடாது கைக்கொண்டு நடாத்தி நற்பெயர் வாய்ந்து இருக்கின்றனர்.

இரண வைத்திய நூல்கள் பல அன்னியநாட்டினரால் கைப்பற்றப்பெற்று, அவர்கள் அம்முறைகளைக் கற்றுத்தேர்ச்சிபெற்று நடைமுறையில் கண்டோர் யாவரும் வியக்கும் வண்ணாம் தொழில்புரிந்துவருகின்றனர். இதனாற்றான் தமிழ் வைத்தியத்தில் சொல்லப்பட்ட இரண வைத்திய முறையானது அவ்வளவு சிலாகிக்கத் தக்கதல்லவென்றும் மேனாட்டு வைத்தியமானது இரண சிகிச்சையில், அறுவை வைத்தியத்தில் சிறந்தது என்றும் நம்மவர் பலரும் சொல்லக்கேட்டிருக்கிறோம். இது அறியாமையேயாகும். தமிழ் வைத்திய நூலாராய்ச்சி உள்ளவர்கள் இதனை ஒருபோதும் அங்கீகரியார்கள். நம்தமிழ்வைத்தியர்கள் கட்டிகள், பிளவைகள், இரணங்கள், புண்புரைகள் முதலியவைகளுக்குக் கத்திகளைக்கொண்டறுத்து சிகிச்சை செய்யாமல் மூலிகைப் பிரயோகங்களாலும் திராவகம், களிம்பு, காரம், தைலம் முதலிய மருந்துகளாலும் எவ்வகைப்பட்ட இரணங்களையும்



எளிதில் ஆற்றி சுகப்படுத்தியிருக்கின்றனர். கத்திகளைக் கொண்டு அறுத்து எடுப்பதற்குப்பதிலாக மருந்துகளைக் கொண்டே புண்ணில் வளரும் சதைகளை அறுத்தெடுப்பது போல எடுத்துவிடுகின்றனரே. இது ஆச்சரியமல்லவா? ஆதலால் கத்திப்பிரயோகம் அவசியமென்று சொல்வதற்கில்லையே. மேலும் வெளிவியாதிக்கு உள்ளுக்கு மருந்து சாப்பிடக்கொடுத்தும் குணப்படுத்துகின்றனர். சிலவைத்தியர்கள் சில சமயங்களில் கத்திகொண்டு புண்களை அறுத்தும் சிகிச்சைசெய்கின்றனர். ஆனால் ஆங்கில வைத்தியர்களைப் போல எடுத்ததற்கெல்லாம் கத்திப்பிரயோகம் பண்ணும் வழக்கம் நம்மவர்க்கில்லை.

189923.

மேனாட்டு வைத்தியம் நம்நாட்டிற்கு வருவதற்குமுன் நம்நாட்டுமக்கள் பிளவை, கட்டி, புண்புரைகள், வெட்டுக் காயங்கள், இரணங்கள் முதலியவைகளால் அவதிப்படாமலிருந்தனரா? அக்காலத்தில் நம்நாட்டில் இவைகளுக்குச் சிகிச்சை இருந்திருக்கவேண்டுமன்றோ? தற்போதும் மருத்துவகுலத்தினர் பலர் புண்புரைகளுக்கு கத்திகொண்டு அறுவை வைத்தியம் செய்துவருவதை நாம் நேரில் பார்க்கிறோம். அவர்கள் டிை முறைகளை எங்கிருந்து கற்றனர்? அதற்கும் ஒரு சாஸ்திரம் இருந்ததால்தானே அவர்களின் முன்னோர்கள் அதைக்கையாடி பிற்காலத்தவர்க்கும் கற்பித்திருக்கின்றனர். இவைகளைச் சற்றும் சிந்தியாது தமிழ் வைத்தியத்தில் அறுவை வைத்தியம் இல்லையென்று வாய் கூசாமல் சொல்லிவிடுகின்றனரே இவர்களை என்னவென்று சொல்வது. ஆங்கில வைத்தியர்கள் குணப்படுத்தமுடியாத எத்தனையோ ரணங்கள் நம் தமிழ் வைத்தியர்களால் குணப்படுத்தப்பட்டிருக்கிறது.

பண்டைக்காலத்தில் சில மூலிகைகளின் உதவியால் மயக்க மருந்திட்டு சிகிச்சை செய்திருக்கிறதாக பண்டை நூல்களிலிருந்து அறிகிறோம். அன்னவர்கள் மூலிகைப்பிர

யோகங்களாலும் மருந்துக்கலவைகளினாலும் எலும்புகளைச் சேர்த்தும் சதைகளை ஒட்டுவித்தும் சுகப்படுத்தி வந்ததாகவும் தெரியவருகிறது. தேரையர் கூறும் சிகிச்சை உள்ளபடியே செய்யப்படுமாயின் இரண வியாதியால் மக்கள் மரணமடைய மார்க்கமில்லை என்றே சொல்லலாம். கபால சல்லியத்திலே பெயர்படைத்தவரென்றால் அந்தத் துறையில் அவர் சாமர்த்தியம் மெச்சத்தகுந்தது. ஒரு விதத்திலும் நீங்காத தலைநோயினால் வருந்தின அரசன் ஒருவனுக்கு அந்நோயின் காரணத்தை நிதானித்துச் சம்மோகினியைப் பிரயோகித்து அவனை மயக்கி, அவன் கபாலத்தைத் திறந்து மூளையிலிருந்த தேரையை ஒரு கிண்ணத்தினுள்ளே பாய்வித்துப்பின்பு, சந்தானகரணியினாலே (முறிந்த உறுப்புக்களைச் சந்துசெய் மருந்து) அந்த மண்டையோட்டை முன்போலப்பொருத்தி அந்த நோயை நீக்கி குணப்படுத்தினாரென்றும் அதனால் அவருக்குத் தேரையர் என்று பெயர் வந் தாகவும் அறிகிறோம். இதற்கொப்பான சரித்திரம் ஒன்று போஜப்ரபந்தம் என்னும் வடநூலினுங் கூறப்பட்டுள்ளது. மயக்கமருந்தின்றியும் கத்திப்பிரயோகமின்றியும் எவ்வாறு மண்டையோட்டைப் பிளத்தல்கூடும். இவைகளைத்தவிர பல அற்புதச் செயல்களையெல்லாம் நம் அறுவைப் பகுதியிலேகேள்விப்பட்டிருக்கிறோம். இவைகளையெல்லாம் யோசிக்குமளவில் ஆங்கில முறை அறுவை வைத்தியத்திற்கும் தமிழ்முறை அறுவை வைததியத்திற்கும் எவ்வளவோ பாகுபாடுகளிருக்கின்றன. தமிழ் வைத்திய அறுவைப்பகுதியை நம்மவர் அதிகமாய் ஆதரியாததால் தற்போது கேவல நிலையில் இருக்கின்றனவென்றும் அறிகிறோம்.

எனவே தமிழ் வைத்தியர்கள் இனியாவது தங்கள் தொழிலோடு அறுவை வைத்திய நூல்களைக்கற்று பாண்டித்யமடைந்து சிகிச்சைசெய்து நம் புராதன வைத்தியத்தைச் சிறப்பிக்கச்செய்வதோடு ஆங்கில வைத்தியம்தான் இரண வைத்தியத்தில் பேர்போனது என நம் மக்கள் கொண்டிருக்கும் தப்பபிப்பிராயத்தை மாற்றுவார்களாக.

ஆசிரியன்.

---



## "சித்தன்" நடுவெழுத்தலங்கார அறுசீர் விருத்தம்.

பண்டித, **K.** அப்துல் சுக்கூர்,
மெட்ராத்திரி ஜமீன் வித்வான், கணியூர்.

பூவின்பேர் மாந்தர்களைப் பலவிதமாய் பிதற்றவைக்கப்
புகுநோயின் பேர்
மேவு மெழில் முழந்தாளோடிரு காலினுணர்வளிக்க
மிகுநோயின் பேர்
நாவதனைச் சுவையின்றிச் செயுநோய்ப் பேரிவையெழுதி
நாப்ப ணேக்கிற்
பாமண மேயுணர் சி. பி. சாமிதந்த சித்தனைநாம்
பார்க்கலா மே.

**Awarded first Class Certificates & Gold Medals for Our GOLDBHASMA.**

**A real boon to the suffering humanity.**

**24 days cost Rs. 10-0-0.**

**No restriction of diet.**

*Apply to:-*

**Malayappasami Vaidyasala,**
**PALNI. S. I.**

# செய்யுள் பகுதி.

(சாந்தன், மதுரை.)

பேசணி சித்ரம் பெரிய சுவாமிவெற் பெங்கணுற்று
ளாசறு மைவருக் காவிய ளாவி யளித்தவரே
தேசர்கள் கற்பவ ரேசூரன் மாண்டு செனித்தவரே
வாசவ னானவ ரேசொல்லு வீர்மதி மன்னவரே.

(இ-ள்) அணி சித்ரம் பேசு பெரியசுவாமி வெற்பு மதி மன்னவரே—அழகாகவும் விநோதமாகவும் பேசுகின்ற பெரிய சுவாமி என்னும் மன்னவனுடைய மலையில் இருக்கும் அரசே! ஆசு அறு ஐவருக்கா இயல் ஆவி அளித்தவரே—குற்றம் இல்லாத அந்த பஞ்சபாண்டவருக்கு உயிரை கொடுத்தவராகிய மாலாகிய வண்டே! தேசர்கள் கற்பவரே-மான்களே! சூரன் மாண்டு செனித்தவரே—சூரபதுமன் மாமரமாக இருந்து பிளக்கப்பட்டவுடன் மறுபடியும் வந்த மயிலே! வாசவன் ஆனவரே—தக்கன் யாகத்தில் வந்தகுயிலே! எங்கண் உற்றாள் சொல்லுவீர்— தலைவி எங்கே இருக்கிறாள் சொல்லுவீராக.

அதாவது ஏ வண்டுகாள்! மான்காள்! மயில்காள்! குயில்காள்! என் தலைவி எங்கே இருக்கிறாள் என்று கேட்டதாக உள்ளது.


## வியாபாரத்திற்கழகு விளம்பரஞ்செய்தல்.

கனவான்களே!

எமது பத்திரிகையில் உங்கள் வியாபாரப்பொருள்களை விளம்பரஞ்செய்து தக்க லாபம் அடையுங்கள். இதுவே நல்ல சந்தர்ப்பம். நீடித்தகால விளம்பரங்களுக்கு குறைந்த விகிதம்.

மானேஜர், சித்தன், பழனி.




# நவீன அகராதி.

(ஸ்கேலிடன்)

(308-ம் பக்கத்தொடர்ச்சி)

ஜஸ்டிஸ்:— அநியாயம், அதிகாரவேட்டை; தன்னலம்; முட்டுக்கட்டை; பணவேட்டை; ஏகபோக உரிமை; அலங்காரம்; வாய்வீச்சு; வாய்ப்பந்தல்; வழவழா கொழகொழா டம்பம்; சக்களத்திப் போராட்டம்; ஆஷாடபூதி வேடம்; காங்கிரசைத் திட்டுவது; சமூகக் குழப்பம்; சட்டசபை மிராஸ்; ஏட்டிக்குப்போட்டி.

பஞ்சாயத்துக்கோர்ட்டு:— சொந்த வீடு; சட்ட நிபுணர் சபை; கைக்குத்துப் பயிற்சிநிலயம்; வாக்குவாதக் கோஷ்டி; பகைப்பள்ளி; அக்கப்போர்; வாயாடிக்கழகம்.

சினிமா:— அம்மணிகள் வசப்படும்மருந்து; புதுக்கூத்து; கள்ளக்காதல்வளர்ச்சி; மன்மதபாணம்; துன்மார்க்கப் புரட்சி; புராண ஆபாசம்; ஆராய்ச்சியின் விளைவு; மற்றுமொரு சிலவு அயிட்டம்.

மாமி:— வேஷக்காரி; நாட்டியக்காரி; மினுக்கி; தளுக்கி; ஒய்யாரி; சர்வாதிகாரி; சூத்திரதாரி; தன்னரசு.

காப்பிக்கடை:— மாமியார்வீடு; பகிரங்கக்கள்ளுக்கடை; சமபந்தி நிலையம்; ரோகோற்பத்தி; நாகரீகக்கடன்.

கண்டிராக்ட்:— கூட்டுக்கொள்ளை; ஆளுக்குப்பாதி; முழுப்பூசணியையும் சோற்றில் மறைத்தல்; புதுப்பெரிய மனிதராகும் வழி; திருட்டுத்தனம்.

உத்தியோகம்:— ஓசுமயம்; லஞ்ச மயம்; பூனிபாரம்; செயற்கைக் குருடு; செயற்கைச் செவிடு; செயற்கை ஊமை; மண்டை கர்வம்; சுயநலம்; டாம்பீகம்; அகம்பாவம்; கல்மனம்; தேள்; நார்க்காலிச் செருக்கு; மானங்கெட்ட பிழைப்பு; அடிமை.

**சர்வகலாசாலை:** கர்வ கலாசாலை; சர்வ கேலிச்சாலை; தரித்திர நாராயணர் உற்பத்திச்சாலை; மாகாணத்தைப் பிடித்த சனியன்; பட்டதாரிகளின் படைக்களம்; காட்டில் பெய்த மழை; திண்டாட்டத் திட்டம்.

**சத்திரம்:—** சோம்பேறிக்களம்; வீணர் ஆசிரமம்; வம்பர் நிலையம்; தண்டம்.

**சீட்டாட்டம்:—** மானங்கெட்ட வேலை; சச்சல்; கொழுத்தவர் கொண்டாட்டம்; வம்புக்கடை, வருத்தங்கெட்ட விளையாட்டு; நாகரீகப் பேய்; அர்த்தமற்ற தமாஷ்.

**கிருமபோன்:—** விளம்பரச் சின்னம்; வியாபாரப்பறை; சுகவாசிகளின் நண்பன்; குடும்ப விசேஷக்குறி.

**கிண்டிப்பந்தயம்:—** பகற்கொள்ளை; வழிப்பறி; பந்தயச் சூது; வெடிகட்டின முட்டாள் கூட்டங்களின் சந்தை; கேள்வியற்ற மோசடி; நவநாகரீக பூதம்; அயோக்கியர்களின் அட்டகாசம்; மொட்டையடித்தல்; திண்டாட்டம்; மடையர்களின் மதி நுட்பம்; பேய்ப்புத்தி.

**இந்தியா—** பிரிட்டிஷாரின் சந்தை; ஏமாந்த தேசம்; இளித்தவாய் நாடு; பாவிகள் வாழும் பூமண்டலம்; உலகத்தார் உறைவிடம்; ஆண்டிகள் தேசம்; கோவிந்தாக்களின் தாயகம்; உயிர்ப்பிணங்கள் வாழும் நாடு; பேடிகள் நிறைந்த இடம்; அந்நியர் கறவை மாடு; மேனாட்டார் சத்திரம்; கும்பகர்ண ராஜ்யம்.

**ஜப்பான்:—** சிங்கக்குட்டி; ஆண்கள் வாழுமிடம்; விழித்துக்கொண்ட நாடு; சுறுசுறுப்புள்ள பூபாகம்; வீரபுரம்; கெட்டிக்காரர் தீவு; சுயமரியாதை மண்டலம்; பஞ்சரத்னம்.

**தமிழ்:—** ஒதுக்கப்பட்ட பாஷை; தாழ்த்தப்பட்ட பேச்சு; விலைபோகா சரக்கு; துரதிருஷ்ட மொழி; நசுக்கப்பட்ட கல்வி; சபையேறாத படிப்பு; பட்டினிப் பாஷை; குருடன் கை விளக்கு; வட்டுச்சுரை.

**சாட்சி:—** கிளிப்பிள்ளை; மனப்பாடம்; கடைச்சரக்கு; குருட்டடி; பிழைக்கும் வழி; பிதற்றல். (தொடரும்)



# திருப்பழநி, மாம்பழக்கவிச்சிங்க நாவலர் அவர்களும்-சீட்டுக்கவிகளும்.

வேளுக்குறிச்சி, மிட்டாதார், ஸ்ரீமான் வேலப்ப கவுண்டர் அவர்கள்மீது சந்திர விலாசம் பாடியது.

(கோவை, திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்.)

(304-ம் பக்கத்தொடர்ச்சி)

"சந்திரவிலாசம்" என்பது தமிழிலே வழங்கப்படுகின்ற தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்று. தாம் பாடத்தொடங்கிய எல்லாநலனும், இனிதமைந்த பிரபுவைப் பாட்டுடைத்தலைவனாகக்கொண்டு, அவன் வேழமூர்ந்து தனது நகரின் தெருக்களில் பவனி வரும்போது, அப்பவனியின் பெருஞ்சிறப்பைக்கண்டு மகிழ்ந்த சித்தினிப் பெண்ணொருத்தி காதல்கொண்டு, அப்பொழுது ககன மண்டலத்தை தனது வெண்ணிறக் கதிர்களால் தூய்மைப்படுத்திக்கொண்டிருந்த முழுமதியைநோக்கிப்பொறாமைகொண்டு சினத்தால் பல மொழிகளால் நிந்திக்கின்றனள். பிரபந்தம் மிகுந்த சுவையுடைத்து. இப்பிரபந்தத்தில் கற்பனைகளும், பொற்புறு அணிகளும், அடிமடக்கு, கடைமடக்கு, முதன் மடக்கு, கடைதிரிபு, இடையுங்கடையும் மடக்கு முதலிய பாவினங்களும், பலவகைச்சிலேடைகளும், மிகுதிறமையும் சமர்த்துமாக இனிய சொல்வளத்தாலும், ஆழ்ந்த பொருள்களாலும், அழகுமிக்க கருத்துக்களாலும் ஆக்கப்பட்டுக் கற்போரைக் காமுறச்செய்யும் கவியுமே நிறைந்துள்ளது.

நூலறிபுலவர்கள், கடிகைமுத்துப்புலவரவர்கள்பாடிய சமுத்திரவிலாசத்தினும் இச்சந்திரவிலாசம் சீரிய சுவையும்செம்பொருளோசையும், அற்புதக்கற்பனைகளும், விற்பனவிளைவுகளும் மிக்குடையனவென்று பலபடப்பாராட்டிக் கூறுகின்றனர். இந்நூலில் ஆசிரியர் பாட்டுடைத்தலைவனின் அரும்பெரும் தியாகங்களையும், சீரிய திறத்தினையும், மேலான புகழினையும், பற்றும்பலசெய்கையினையும் விதம்பெறஎடுத்து நயமபடக்கூறும் சிறப்புக்கள் அறிஞர்கள் சுவைத்து இன்புறத்தக்க அருமையுடையன. சந்திரவிலாசத்தை ஓதி உணர விரும்பும் அன்பர்கள், மார்க்கசகாயன் கோட்டை வித்வான் பழனிச்சாமி ஆச்சாரி அவர்களால் தனியாய் அச்சிட்டுள்ள, "மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்கள் பிரபந்தத்திரட்டுள்" கண்டுகொள்க. அச்சேறியுள்ளதொரு பிரபந்தத்தை நாம இங்கு எடுத்தெழுதுவது மிகையாகுமென்று விடப்பட்டது. நிற்க

தனது ஆதரணைக்கர்த்தராகிய ஸ்ரீமான் வேலப்பகவுண்டரவர்களின் ஆதீனத்தினின்றும் தாம் வெளிப்பட்டு வேறிடங்களுக்குச் செல்லவேண்டுமென்றஎண்ணம் நமது நாவலர் அவர்கட்கு நெஞ்சில் தோன்றவே அதனைச் சமயமறிந்து பிரபுவின்பாற்சென்று தனது கருத்தை அறிவித்துக்கொண்டனர். அது:—

### வெண்பா.

" மஞ்சார் பொழிற்பழனி மாநகர்விட் டுப்புறப்பட்
டஞ்சாறு மாதங்க ளாயினகாண்—செஞ்சாலி
வேளைநல்லூர் வேலப்ப வேளே யிதுநல்ல
வேளையருள் செய்வாயென் மேல் "

என்ற வெண்பாவால் தெரிகிறது. பிரபுவும் நாவலர் அவர்களது விருப்பத்திற்கு மாறு கூறாது அவர் மனம் மகிழும் வகையில் அரும் பெரும் பரிசில்களை மேலும் வெறுக்க



நல்கி அன்புததும்ப அரும் விடை ஈந்தனர். இவ்வுண்மை "கனமுநிதியுநவ மணியுமணி பணியுநற்சால் வையுமேலான வாகனமுமதுரகவி வலர்க்குதவும் வேலப்ப வரிசை மாலே" "பாவலர்க்குவாசி பெட்டிவண்டி முதலவருள் வேலப்பமோகனகெம் பீரமாலே" என்பவற்றால் வேலப்பவள்ளல் பரிசில் நல்கியது புலனும்.

நமது நாவலரவர்கள் விண்மதிபோல் விளங்கு புகழ்மிக்க வேலப்ப கவுண்டரவர்கள்பால் விடைபெற்றுக்கொண்டபோது அப்பிரபுவின் அருமை பெருமைகளையும், தமது தகுதியறிந்து உபசரித்தவற்றையும், அவரது கனம், குணம் தமிழறிவு, கொடைமடம் முதலியவற்றையும் அழகுபெறத் தொகுத்து இரு செய்யுள்களால் வாழ்த்தாகப் பாடியுள்ளார். அவ்வழகிய கவிகள் அடியில் வருமாறு.

"தருவு மணியு முகிலுநிதி தானுங் காம தேனுவு மோ
ருருவு கொடுவந் தெனப்பலரு முவப்பக் குணமு மொழுங்கு மன்புந்
திருவு நலமுங் குலமுநனி திகழத் தோன்றித் திருந்துபுகழ்
மருவு நமது வேலப்ப மகிபன் வாழி வாழியவே"

"செந்தமிழின்சுவைத் தெள்ளமு தஞ்செவி தேக்கி மிகச்
சொந்தம மைந்தென் மனப்படி நல்கித் துயர் தவிர்த்துச்
சந்தத முங்கன சற்கீர்த்தி செல்வந் தழைக்க வளர்
மந்தர திண்புய வேலப்ப பாண்டியன் வாழியவே"

நமது நாவலர் வேளுக்குறிச்சியில் தங்கியிருந்தகாலத்தில் இடையில் நிகழ்ந்த செய்திகள் அனைத்தும் செய்யுள் வகையில் விரிந்து கிடப்பதால், அவற்றைஇங்கு விவரித்தால் வாசக நண்பர்கள் மனஞ்சலிப்பரென்றஞ்சி விவரிக்காது விடப்பட்டன.

இவ்வளவே, வேளுக்குறிச்சி ஜமீன் மிட்டாதார் ஸ்ரீமான் வேலப்ப கவுண்டர் அவர்கள்மீது மாம்பழக்கவிச்சிங்கநாவலர் அவர்கள் சந்திரவிலாசம் பாடிய செய்தி.

(தொடரும்)

# கிராமத்தில் நமது வாழ்க்கை நிலை.

(மு. கா. அம்பலவாணன்)
சமஸ்தான வித்வான், இடையகோட்டை.

நாம் வசிக்கும் தாய் நாட்டிற்கு வடக்கே இமயமும், தெற்கே ஹிந்துமகா சமுத்திரமும், மேற்கில் அராபிக்கடலும், கிழக்கில் வங்காளகுடாக்கடலும் எல்லைகளாய் அமைந்திருக்கின்றன. இந்நாடு 29000 சதுரமைல் விஸ்தீரணங் கொண்ட ஒரு தீபகற்பம் என்று பூமிசாஸ்திர நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றது. இத்தீபகற்பத்தையே பாரத நாடெனப் பகர்கின்றோம். இந்நாட்டில் 685622 கிராமங்களும், 2313 நகரங்களும் இருக்கின்றன. 35 கோடி மக்கள் வசிக்கின்றனர். இவற்றில் பெரும்பான்மையோர் கிராமவாசிகளாயும், சிறுபான்மையோர் நகரவாசிகளாயும் இருக்கின்றனர். இக்கட்டுரை பொதுவாக எல்லாக்கிராமத்தையும், சிறப்பாகத் தமிழ்நாட்டு வாசிகளையும் குறிப்பிடுவதாகும். நந்தமிழ்நாடு சில நூற்றாண்டுகளுக்குமுன் சேர சோழ பாண்டியர்களென்னும் முப்பெரும் தமிழ் வேந்தர்களால் ஆளப்பட்டுவந்திருக்கின்றது. இம்மன்னர்களின் காலத்து தாய்மொழி என்னும் நந்தமிழ்மொழி நன்கு வளர்க்கப்பட்டு கல்வி, கைத்தொழில், விவசாயம், வாணிபம் முதலிய பல துறைகள் நன்கு வளர்க்கப்பட்டு பொருளாதார நிலையுடையதாய், முற்போக்குடையதாய் நமது கிராம நலன்கள் மிகச் சீரும் சிறப்புமுடையதாய் விளங்கிவந்தது. பின்னர் இம்மன்னர்கள் ஒற்றுமை குன்றி சில குறுநில மன்னர்களோடும், தங்களிற்றாங்களும் போரிட்டு உள்நாட்டுக் கலகங்களையும், அரசியல் குழப்பங்களையும் உண்டுபண்ணுவதாயினர். இவ்வேதுக்களாலேயே அந்நியர் நந்தமிழ் நாட்டையும் கைப்பற்றுவதாயினர். சின்னூற்றாண்டுகட்கு முன் இந்தியாவின் மத்தியகால கிரேக்க தூதராகிய மெகஸ்தெனிஸ் முதலிய அறிஞர்கள் நம் நாட்டின் கிராம நிர்வாகத்தை மிகவும் பாராட்டி எழுதியிருக்கின்றனர். சோழமன்னர்களில் பெரும் புகழ் வாய்ந்த இராஜராஜ சோழன் காலத்திய கல்வெட்டுகளும் அவ்வாறே கூறுவதென்பதை சில அறிஞர்களின் சொற்



பொழிவாற்றெரியவருகிறது. இந்தியசரித்திர ஆராய்ச்சியாளராகிய வில்சன், கோல்மன், தத்தர் முதலிய புராதன ஆராய்ச்சியாளர்களும் நமது கிராமநிர்வாகத்தைப் புகழ்ந்தே எழுதியிருக்கின்றனர். மேற்கூறிய நன்னிலையில் நமது கிராமங்கள் தற்போது இல்லையென்பதை மேனாட்டுக்கல்வி நிலையையும் நம் நாட்டுக் கல்வி நிலையையும் ஒப்பிட்டு நோக்கின் நம் கீழ்நிலை நன்கு புலனாகும். மேனாடாம் பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா முதலியவிடங்களில் கல்வியறிவாளர்கள் 98; 85; 80; 75% என்றும், நம் நாட்டில் 5; 6% என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்நிலையில் நிகழும் நூற்றாண்டையே மிக நாகரீக காலமாக நாம் கருதுகிறோம்.

கிராமவாசிகளாகிய நம்மவர்க்குஇவை மிகமிகப்பொருந்தாதென்றே நாம்நினைக்கவேண்டும். தற்காலம் நாகரீகமெனக் கருதுபவைகளெல்லாம் நம்மை மிகவும் வறுமையில் ஆழ்த்திவருகின்றது. உதாரணமாக நமது கிராமங்களில் சுமார் 20 ஆண்டுகட்குமுன் கள்ளென்னும் விஷபானமும், காப்பி என்னும் அவசியக்குடியும் அதிகமாக இல்லை. தற்போதோ இவ்விரு குடிகளும் மிக மலிந்துவிட்டதோடு பீடி, சிகரெட், சுருட்டு முதலியனவும், ஒயின், பிறந்தி, பீர் முதலிய அந்நிய நாட்டுக் குடிச் சரக்குகளும் சேர்ந்துவிட்டன. நமது சென்னை மாகாணத்தில் நிலவரியும் கள் வரியும் சரிசமமாகவே இருப்பதாக மதுவிலக்குக் கமிட்டியார் கூறுகின்றனர். சென்ற சுமார் 50 ஆண்டுகட்குமுன்னிருந்த நம்நாட்டு ஜீவாதாரமான கைத்தொழில்களெல்லாம் இன்று நின்றுவிட்டன. இவற்றால் பல ஏழைக்குடும்பங்கள் பட்டினிகிடந்து பரதவிக்கின்றனர். நமக்குவேண்டிய உணவும் உடையும் நம் நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுவந்தன. இன்று உணவுப்பொருள்களில் சிலவற்றையும் அவசியமாய் நமக்கு வேண்டிய உடைமுழுமையும் மேனாட்டிலிருந்தே வாங்கப்பட்டு வருகின்றன. தற்போது சிற்சில இடங்களில் தேசீய இயக்கத்தின் பயனால் சிறிது சுதேசியும் வளர்க்கப்பட்டு வருகின்றன. நாம் உடைக்காகவும், மதுபானத்துக்காகவும் 70 கோடிக்கதிகமாய்ச்செலவிட்டுவருகிறோம். இத்துடன் கல்யாணம், கருமாதி, இழவு, திவசம் முதலியவற்றிற்கு ஆகும் செலவுகளோ அதிகம்.

தேவைக்கதிகமான போக்குவரத்து சாதனங்களாலும், அனாவசிய ஆடம்பரங்களினாலும், ஆணவமிகுதியால் ஒருவர்க்கொருவர் செய்துகொள்ளும் சில விவகாரங்களினாலும், அடிதடி, கொள்ளை, கொலை, களவு முதலிய கிரிமினல் சிவில் கேசுகளினாலும் செலவிடும் பணமோ மிக அதிகம். நம் நாட்டில் 100-க்கு 93 பேர் விவசாயிகள். விவசாயத்தொழில் முறையைமுதன்முதலாகக் கண்டுபிடித்தவர் நந்தண்டமிழ் நாட்டினரே என்பதை தொல்காப்பிய முதலாய பண்டைத்தமிழ் நூற்கள் கூறுகின்றன. இத்துறையில் கைதேர்ந்தவர் இந்தியரே என்பதை மேனாட்டினரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இத்துடன் நம் நாட்டு குடிசைத்தொழிலாகிய நூல் நூற்றல், நெசவு என இவ்விரண்டிலும் மிகத்தெளிவுபெற்றவர்களாய் இருந்தனரென்பதற்கு போதிய சான்றுகள் உள. இற்றைக்கு 135 ஆண்டுகட்கு முன் நமக்கு வேண்டிய துணி நம் நாட்டிலேயே உற்பத்திசெய்யப்பட்டும், அந்நிய நாடுகளுக்கும் ஏற்றுமதியும் செய்யப்பட்டிருக்கிறது. 1870-ல் ரிவர்ட்நாக் என்னும் ஓர் ஐரோப்பியர் நம்மிந்திய கைத்தறித்துணிகளை மிகச்சிலாகித்து எழுதியிருக்கின்றனர். தற்போது இந்திய விவசாயிகள் கடன்வாய்ப்பட்டுக் கலங்குகின்றனர். இவற்றிற்கு அடிப்படையான காரணம் நம் கிராமப்பெரியதனக்காரரும் நமது அறியாமையுமாகும். அக்காலத்துக் கிராமவாசிகளில் செல்வாக்கு உடையவர்கட்கே பட்டிநாட்டாண்மையும், குட்டிக்கணக்கும் துரைத்தனத்தாரால் கொடுக்கப்பட்டிருந்தன. இவர்கள் முதன்முதலாக கிராமப்பொறுப்புகளைச் சரிவரக் கவனித்து பொது ஜனங்கட்கு யாதொரு இடைஞ்சலுமின்றி தங்களுடைய கடமைகளை செவ்வனே எவ்வித காரியத்தையும் நடுநிலையாக நிறைவேற்றக்கூடியவர்களாய் இருந்தனர். நாளடைவில் இத்தலைவர்கள் பொதுஜனங்களைக்காட்டிலும் தாங்கள் அறிவாற்றல்களிலும் அந்தஸ்திலும் உயர்ந்தவர்களெனத் தங்களைத்தாங்களே மேன்மை பாராட்டிக்கொள்வதாயினர். அவர்களின் நற்காலம் துரைத்தனத்தாரால் கிராமச் சட்டதிட்டங்களையும் பயிற்றுவிக்கப்பட்டன. இவற்றால் உத்தியோகம் புருஷலக்ஷணம் என்பதையும் உணர்ந்தவராயினர். முன்னைய நாட்களில் கிராமப்பொது ஜனங்கள் தங்களுக்குள் ஏற்பட்ட



விவகாரங்களைத் தீர்த்துக்கொள்வதன் நிமித்தம் நகரங்களிலுள்ள கச்சேரிக்கோ கோர்ட்டுக்கோ அதிகமாகச்செல்வது இல்லை. ஏனெனில் முன்னைய கிராமப் பெரியதனக்காரரும் அவ்வக்கிராமத்திலுள்ள பொதுஜனங்களும் சமரசசுபாவம் உடையவர்கள் ஆனதால் தங்களுக்குள் ஏற்படும் எவ்வித சிக்கலான வழக்குகளையும் அவ்வக்கிராமத்தின் தலைமையாளர்களின் முன்னிலையில் மிக எளிதாகத் தீர்த்துக்கொள்வாராயினர். இம்முறையில் ஜனங்களுக்கு வீண் சிரமமும் பணச்செலவும் அதிகமான வெளிப்போக்குவரத்தும் ஏற்படுவதற்கில்லை. முற்காலத்து கிராமத்தலைமையாளர்கள் தன்னலமற்ற பெருமையாளர்களாய்த் திகழ்ந்தனர். அவற்றின் பயனால் தங்கள் கிராமங்களில் ஏற்படும் எவ்வகை விவகாரங்களையும் மிகச்சுலபமான வழியில் தீர்த்துக்கொடுத்து நல்வழிப்படுத்துவாராயினர். இவ்வுயர்பெருந்தன்மையை பிற்காலத்தவர் கைநழுவவிடலாயினர். அன்றே நமது கிராமங்களில் பலவகை உயர்வு தாழ்வுகளும், மதச்சச்சரவுகளும், சமயச்சண்டைகளும் தலைவிரித்தாட ஆரம்பித்தன. அன்று முதல் இன்றளவும நமது கிராமநலன்கள் நாளடைவில் குறைந்துகொண்டே வருகின்றன. உலக ஜீவாதாரமான தொழில்களில் விவசாயம் முதன்மையுடையது. இத்தொழிலைத் தலைமையாக உடைய நம்மவர்க்கு 700 கோடி ரூபாய் கடன் இருப்பதாக பத்திரிகை வாயிலாக அறிகிறோம். இக்கடனை 100-க்கு 90-க்கதிகமானவர்கள் திருப்பிக்கொடுக்கச் சக்தியற்றவர்களாயிருக்கின்றனர். இத்தகைய நிலைமைக்குத்தகுந்த காரணம் கிராமப் பெரியதனக்காரர்களென்றே கூறவேண்டும். எப்படியெனில் இவர்கள் சுயநலங்கருதி பிறர் நலம்போற்றாது பொதுஜனங்களின் மேலாய ஓர் உன்னத நிலையை அடைவான்வேண்டி குடும்ப நலனுக்கவசியமில்லாத வரவுக்கு மிஞ்சிய செலவுகளைப் பெருக்கிவருவதாயினர். இவர்களின் படாடோப ஆடம்பரங்களைக்கண்ட பொது ஜனங்களில் வசதியுள்ள பொருள்வருவாயுடைய குடும்பங்களில் சிலர் கிராமப்பெரியதனக்காரர்களையும் பின்பற்றி ஒழுகுவதாயினர். சின்னாட்களில் தங்களைப் பிறர் கௌரவமுடைய மனிதனாகக் கருதவேண்டும் என்பதாக தாங்கள் ஒவ்வொருவரும் செய்துவரும் தொழின்முறை

விடுத்து தேவைக்கதிகமான ஆட்களை நியமித்து விவசாயமென்னும் தொழிலின் முறையை நடத்த ஆரம்பித்தனர். தங்களின் முழுப்பொறுப்பையும் பண்ணையாட்களின் கையில் கொடுத்து தாங்கள் சிறிது உல்லாசமாக வெளியிடங்கட்குப் போவதுவருவதாயினர். அவ்வகையில் தங்கள் வருவாய் சிறிது குறைந்தது. பிறர் தம்மை மதிக்கும்படியாக நாகரீக முறையில் நடந்துகொண்டதற்கீடாக தங்கள் பெருவாரியான ஊதியங்குறைந்து கடன்தொல்லைகள் பெருகலாயின. நாகரிகம் பெற்ற பெரியமனிதர்களின் கூட்டத்துக் கடன் பெருகி வருவதைக்கண்ட உழைப்பாளிகளாகிய பொது ஜனங்கள் இவர்களை மதிக்காது நழுவினர். பொது ஜனங்களிடத்தில் தங்கள் மதிப்பு குறையவே ஏனைய மக்களிடத்து துவேஷபுத்தியையுடையராய் தன்வயப்பட்ட சிலர்களோடு கிராமங்களில் கக்ஷிகளை ஸ்தாபிப்பதாயினர். தங்கள்பால் அதிருப்தியுடைய ஒருசிலர்க்குப்பல இடையூறுகளை இயற்றுவதற்கு விரைந்து முற்பட்டனர். இதனால் சண்டை சச்சரவுகளும் குழப்பங்களும் மக்களின்பரஸ்பர ஒற்றுமையும் குலைந்தது. நம் ஒற்றுமைகுறைய நம் விவகாரங்களும் வெளிக்கிளம்பின. விவகாரங்கள் வெளிக்கிளம்பவே தேவைக்கதிகமான கோர்ட்டுகளும் சட்டதிட்டங்களும் ஆக்கப்பட்டன. ஈண்டு சீரிய முறையில் நேர்மையோடிருக்கும் பிறர்நலம் போற்றிப் பெருந்தகையாளராய் விளங்கும் எந்தத் தலைவர்களையும் அவர்களின் சாதாக்களையும் ஈங்கு குறிப்பிடவில்லையென்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொண்டு மேற்சொல்லுகிறேன். நம் நாட்டிற் சிற்சில இடங்களிற் கைக்கூலி வாங்கும் கசடர்களும், ஆசைப்பேய்பிடித்த நயவஞ்சகப் பெருச்சாளிகளும், தன்னலப் போலிகளும் பல கண்ணியமான குடும்பங்களை தம் வயப்படுத்தி பல அல்லல்கட்குட்படுத்தி தங்கள் பெண்டு பிள்ளைகளோடு உண்டு கொழுத்து நமது நாட்டைச் சீர்குலைத்து வருகின்றனர். இத்தகைய பெரியார்கள் இனிமேலாவது இத்தகைய தீய வழிகளினின்றும் விலகி எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓரினம், எல்லாரும் இந்திய மக்கள் என்பதைத் தங்கள் பகுத்தறிவாலுணர்ந்து நல்வழிப்படுவார்களாக.

---



# பாமர மக்களிடையே கல்வி பரப்புதற்கு ஏற்ற வழியும் சாதனங்களும்.

(T. D. சுப்பிரமணியம், தலையப்புத்தூர்.)

(306-ம் பக்கத் தொடர்ச்சி)

189923

16. கல்வி பரப்புதற்கு கூட்டுறவுச்சங்கங்களும் இன்றியமையாதவை. "டென்மார்க்" "அயர்லண்டு" முதலிய இடங்களைப் பற்றி அறிவோமானால் அத்தேயங்களின் முன்னேற்றத்திற்குக் காரணம் கூட்டுறவே என்பது விளங்காநிற்கும். கூட்டுறவு எனில் கடன் வாங்குதல் மட்டும் அன்று கல்வித் துறைகளிலும் பாடுபடுதலும் ஒன்று. Co-operation is the Hand Maid of Education and every teacher must not only be an educationist but a cooperator என சென்னைமாகாண கூட்டுறவுச் சங்கத் தலைவர் கூறி உள்ளார்.

17. பெண் கல்வி நம் நாட்டில் மிகவும் குறைவு. அஃது மிகவும் பரவவேண்டும். ஆனால் அவர்களுக்கு எண், எழுத்து என்பவையோடு ஆடல், பாடல், மருத்துவம், கைவேலை, குடும்ப சீர்திருத்தம், சிக்கனம் இதுபோன்ற பலவகைப்பட்டவைகளாய்ப் போதிக்கவேண்டும்.

18. ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்லிவிட்டோமே, இவை யாவும் ஒரு நாளில் சாத்தியமா என நினைத்தால் அது பிழையேயாம். பன்னெடுநாளாய் நம்மைச் சூழ்ந்திருக்கும் "அறியாமை" என்னும் இருள் ஒரு கணப்பொழுதில் மறையும் எனக்கனவு காண்பது, உண்மை விஷயங்களை ஆராய்ந்தறியாத உற்சாகமேயாம். இதற்கு எதிர்முகமாக ஒன்றும் சாதிக்க இயலாது எனக்கூறுவதும் பெருந்தவறு. இவ்விரண்டையும் விட்டு இடையதாய உலையா முயற்சி கொளல் வேண்டும். உயர்தரக்கல்விகற்ற நம்மவர் உத்யோக வேட்டையாடுவதை ஒழிக்கவேண்டும். ஒவ்வொருவரும் தம் தாய் நாட்டிற்கும், தான் பிறந்த சமூகத்திற்கும் தான் இயற்றவேண்டிய கடமை ஒன்றுளது என உணரவேண்டும்.

மக்கள் கண் எனப்போற்றப்படும், எண் எழுத்து இவைகளைப்போதித்துவரும் ஆரம்ப ஆசிரியர்களைப்பற்றி இரண்டொன்று கூறுதுவிட என் மனம் இடந்தரவேயில்லை.

பொதுவாக ஆசிரியர்களது கதி மிகவும் விசனிக்கத்தக்கதே. அன்னவர்கள் ஸ்தல ஸ்தாபனங்களாலும் பொது மக்களாலும் மிகவும் கேவலமாகக் கருதப்பட்டுவருகின்றனர். "The face value of a teacher is very poor though his intrinsic value is great" என்ற என் ஆசிரியர் அடிக்கடி கூறியது இன்னும் என் செவிகளில் ஒலிக்கின்றது. ஸ்தல ஸ்தாபன தலைவர்களே சகல காரியங்களையும் கவனித்தல் என்பது சாத்யமானதல்ல. அதற்காக நியமிக்கப்பட்டுள்ளவர்களிடமும், அங்கத்தினர்களிடமும், இலாகா உத்யோகஸ்தர்களிடமும் அந்தோ! ஏழை ஆசிரியர்கள் சிக்கிக்கொண்டு ஒவ்வோர் சமயம் விலங்கினும் இழிவாக நடத்தப்படுவதுடன் டப்பாக்களை உருட்டுவதைப்போல் ஒவ்வோர் சமயமும் ஆசிரியர்கள் மூலைக்கு மூலை தகவலில்லாமல் ஈவு இரக்கமின்றி உருட்டப்படுகின்றனர். இவ்வாறாயின் ஆசிரியர்களுக்கு என்ன உற்சாகமும், தங்கள் தொழிலின் கடமையில் பொறுப்பும் இருக்குமென்று ஊகிக்கவேண்டியதே. இதை எழுதினால் சாத்தியமல்ல. சொல்லத்தான் படுமா? எண்ணத்தான் படுமா? இல்லை! இல்லை!

ஒரு பக்கமாகவே குறை கூறுதல் நீதியுமன்று. மறு பக்கம் ஆராய்ந்தால் ஆசிரியர்களும் மிகவும் கேவலமாக நடந்துகொள்ளுகின்றனர். சிலருக்குப்போதிய அறிவுகூட இருப்பதில்லை. யோக்யதாம்சம் என்பது பரீக்ஷைக்கடிதம் தான். உண்மையில் அதன் நோக்கமே கிடையாது. "ஒன்றுக்கும் உதவாதான் வாத்தியார் வேலைக்கு" என்றபடி ஆசிரியர்கள் பெரும் பகுதியாகவே காணப்படுகின்றனர். இத்தகையோரால் கல்வி எம்மட்டும் போதிக்கப்படுமென்பதை யூகித்துக்கொள்ளவேண்டியதே. இத்துடன் இதை விட்டு "ஆசிரியர்களின் கதை" என்னும் வேறு கட்டுரையில் விரிவாக எழுத எண்ணியுள்ளேன்.



மேற்கூறிய விஷயங்களால் சீர்திருத்தமென்பதும், முன்னேற்றமென்பதும் அவரவர் தனிப்பட்ட முறையில் இயலாதென்பது கூறாமல் விளங்கும். அரசாங்கமும், ஸ்தல ஸ்தாபனங்களும் நேரே முயற்சிகொண்டு முற்கூறிய வாலிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் போதுமான அளவு உதவி புரியவேண்டும். "மன்னிய மூன்றில் நடுவணதெய்த இருதலையும் எய்தும்" என்று கூறியுள்ளபடி (அறம், பொருள், இன்பம்) இவைகளுள் பொருள் இன்றி எதுவும் கைகூடாது. அரசாங்கம், ஸ்தல ஸ்தாபனங்கள், இன்னும் பெரிய சீமான்கள் முதலியவர்கள் பண உதவி செய்தாலன்றி மக்களின் கல்வி பரவுவதற்கு வழியே இல்லை. யாவரும் இதற்காக ஒன்றுசேர்ந்து உழைக்கவும் வேண்டும். ஆதலின் என்று அரசாங்கமும் பொது மக்களும் இவ்விஷயத்தில் ஒன்றுபட்ட கருத்தினராய் ஒத்துழைக்க முன்வருகின்றனரோ அன்றுதான் நம் மக்களிடையே புத்துணர்ச்சி உண்டாகும். அஃதின்றேல் எம்முயற்சியும் பயன் தராதொழியும். அத்தகைய பெரு உணர்ச்சி எங்கும் உண்டாக இறைவனை இறைஞ்சுகின்றோம். (இறைவன் கல்வி சிறந்த தமிழ் நாட்டிற்கும், ஏனைய நம் இந்திய சகோதரர்களுக்கும் துன்பம் நீக்கி யாவர்க்கும் இன்பம் அளிப்பானாக.)

"சுசீலா"

சுகந்த வாசனைத் தைலம்.

நூதனமுறைப்படி தயாரிக்கப்பட்டது. இது கூந்தலை கருமையாக வளரச்செய்யும். ரோமம் உதிர்தல், தலையில் உண்டாகும் பொடுகு முதலியவைகளை நீக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 10.

கிடைக்குமிடங்கள்:-

உடுமலை K. S. ராமநாத அய்யர், ஹோட்டல், பழனி.

பீம விலாஸ், அடிவாரம், பழனி.

# அஞ்சுகாவின் அன்பன்.

(R. P. ராஜன், பொருளூர்.)

"அப்படிச் சொல்லுங்க வழக்க! இவ்வளவுதானே! நான் என்னமோன்னு பயந்தே போய்விட்டேன்! இரண்டு வாரத்தில் பாருங்களேன், எங்கள் சாமர்த்தியத்தை! கண் கண்ட தெய்வம் - அந்த ஜகதாம்பிகையினாலே முடியாதது என்னே இருக்கிறது? இந்த வியாதியை சொஸ்தம் பண்ண முடியவில்லையானால், இந்தக் குருக்கள் தொழிலையே நாங்கள் விட்டுவிடுகிறோம். இது கெட்டுது தள்ளுங்கள்" என்றார் கனபாடி சாஸ்திரிகள் பல்லிளித்தவாறு.

"ஆமாம்! ஆமாம்! இது என்ன சாமான்யமான விஷயம். அம்மன் மனம் மகிழும்படி செய்தால் போதும். உடனே இந்த பாக்யவதியின் சற்புத்திரிக்கு உடலும் உயிரும் திகழும். இரண்டு வாரம் வேண்டுமோ? உம்! இரண்டே நாழிகை போதுமானது. ஒன்றும் பிரமாதமில்லை. ஆயுஸ் ஹோமம், மகாமந்திர ஜபம், வேதபாராயணம்-அவ்வளவே! குறைந்தபக்ஷம் கால் மண்டலமாவது தினந்தோறும் சமாராதனை. அப்புறம் கேளுங்களேன்! மகாஹைமவதியின் பூர்ண நேத்ர கிருபையின் பிரகாசமானது உங்களது ஒரே புத்திரியின் உடலைப்பிடித்திருக்கும் வியாதி இருளை நீக்கி விடுமென்பது சர்வ நிச்சயம். ஏதோ உங்களுக்காக மிகவும் குறைந்த தொகை, முன்னூறு ரூபாய் போட்டுக்கொடுக்கிறேன்" என்று பரிபூரண சாஸ்திரிகள் தமது தொண்டையை சரிப்படுத்திக்கொண்டே அவருடன் ஒத்துப்பாடினார். அவரது வதனத்தினின்றும் உலகப்பிரசித்தியான நயவஞ்சகத்தின் ஒளியானது களங்கமற்றுப் பிரகாசித்தது.

அப்போது அவர்கள் கிராமத்திற்கு ஹரிகேசம் பிள்ளையே பெரிய மனிதர். ஊராரெல்லாரும் அவரது சொல்லிற்கு உட்பட்டு நடந்துவந்தார்கள். ஏராளமான ஆஸ்தி



உடையவர். வேண்டிய அளவுக்குமேலேயே பெற்றிருந்தார். கவலை இல்லாதவர் யாரே உளர்? அவரது மனைவி சாவித்திரி அம்மாளுக்கு ஒரே ஒரு பெண். பெண்ணிற்குத்தானென்ன! ஐய! மகாலட்சுமியின் தேஜஸ் அடா இது! அந்த தெய்வீகமாதின் அருள் வன்மை முழுதும் இந்தக்குழந்தையிடம் பிரதிபலித்திருக்கிறது என்று ஒரு சிறு குழந்தைகூட தன் வாயின்மேல் கைவைத்து பயபக்தியுடன் இந்தக்குழந்தையைப்பார்த்துச் சொல்லும். உண்மையில் இவ்வளவு பெருமையும் சுக வாழ்வும் இந்தக்குழந்தையாலேயே வந்ததென்றும், மற்ற உற்றார் உறவினரொருவரும் இதற்கு அருகரல்லவென்றும், அந்த ஊரிலுள்ள ஒவ்வொருவரும் தங்களுடைய உண்மையான ஹிருதயத்தில் தியானித்து அவளை அந்தரங்க பூஜை செய்துவருவார்கள். ஹரிகேசம் தம்பதிகளுக்கு இவ்வளவு பெருமை வாய்ந்த குழந்தை ஆணாய்ப்பிறந்திருந்தால்....? என்ற ஒன்றுதான் அவர்களது குறை. சுகுமாரனும் அப்போது பதின்மூன்றுவயது பாலன். கோடைகால விடுமுறை நாட்களைக்கழிப்பதற்காக தன் மாமன் ஹரிகேசம் வீட்டிற்கு வந்திருந்தான். கூடத்தில் காலெடுத்துவைத்ததும் ஒருசிறு பெண்குழந்தை ஆனந்தமாகக் குதித்து விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்த்தான். இவனைக்கண்டதும் அச்சிறுமி நாணத்தால் முகஞ்சிவக்க பதுமையென அவ்விடம் விட்டசையாது அவன் முன்பு நின்றாள். திடீரென்று கருமேகத்தினிடையே மின்னற்கொடி தோன்றுவதென அக்குழந்தை 'பக்'என ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு வேகமாக வீட்டிற்குள் ஓடிவிட்டாள். இதைக்கண்ணுற்ற சிறுவனின் முகத்திலும் குறு நகையும், சிறிது வெட்கத்தின் அறிகுறிகளும் தோன்றியமைந்தன. இதற்கு அடுத்த நாள் இவ்விரு குழந்தைகளும் தோட்டத்தில் சந்தோஷமாக கைகோர்த்துக்கொண்டு விளையாடுவதைப்பார்த்தால் அட! இதென்ன இவர்கள் பிறந்ததுமுதல் ஒன்றாகவே இருப்பவர்களோ? என்ற கேள்வி அப்பொழுது நம் உள்ளத்தில் எழுந்தது. அது ஒரு

காலம். பின்பு இத்தியாதி வைபவங்களுடன் இந்தக்குழந்தைகளின் நேசமும் முறைப்படி வளர்ந்து, இவர்கள் தக்க வயது அடைவதற்குள், இவர்களது அன்பு ஒருவரறியாது முன்னேறிச்சென்று இருவரையும் தம்பதிகளாகச்சேர்த்து வைத்து, காதற் கடலில் அமிழ்த்தி இருந்ததை இப்போது நாம் பார்ப்பதும்ஒரு காலமே.

அஞ்சுகம் தமது புக்ககத்தில் வாழ்ந்துகொண்டிருந்தபோது எக்காரணத்தைக் கொண்டோ ஜுரமாகப் படுக்க நேர்ந்தது. இதை அறிந்த அவளது பெற்றோர்கள் அவ்விடம் சென்று அஞ்சுகத்தைத் தங்களுடன் அனுப்பிவைக்கும்படியும், அவளுடைய திரேக சௌக்கியத்தைப்பற்றிக் கண்ணுங்கருத்துமாயிருந்து சீக்கிரத்தில் தேற்றி அனுப்பிவிடுவதாகவும் கூறி, சுகுமாரன் எவ்வளவோ தடுத்துரைத்தும் கேளாது தங்களுடன் அழைத்துவந்தனர். பிறந்தகம் வந்ததிலிருந்தே ஜுரம் அதிகமாயிற்றேயொழிய குறைந்தபாடில்லை. இதற்குக்காரணம் நேயர்கள் அறிந்ததே. கிராமத்தில் வாழ்பவர்களாதலின் பிறரால் பரிகசித்து ஏளனம் செய்வதற்குரிய கேவலம் தேவதாபலிபூஜை, மந்திரம், நாவித வைத்தியம் இவைகளில் அசையாப்பெரும் நம்பிக்கை உடையவர்கள். சில பேதைகள் சொல்லைக்கேட்டு இந்த வைத்தியங்களில் நாட்களைக் கழித்துவிட்டார்களாதலால் பூங்கொடியொத்த அஞ்சுகத்தின் ஜுரமானது நாளுக்குநாள் அபிவிருத்தியடைந்து, பித்த ஜுரமாக மாறி அருகிலிருப்பவரை உற்றுநோக்கி மிரள மிரள விழிப்பதும், ஏதேதோ வாயில்வந்தபடி பிதற்றுவதும், உச்சஸ்வரத்தில் கூவவும் ஆரம்பித்து விட்டாள். சிலசமயங்களில் படுக்கையைவிட்டு எழுந்து மலர்கள் ததும்பிவிளங்கிய இளம்பூங்கொடியையொத்த அவளது யௌவன சரீரம் தரையில் விழுந்தும் புரண்டது. அந்தோ! கொடும்பேயன்றோ நம் கண்மணியை ஒரே மகளை இப்படிப்பிடித்து ஆட்டுகிறது! ஐயனாரே! உமக்கு எத்தனை பலி வேண்டுமானாலும் நாங்கள் கொடுக்கத்தயார்! ஓ! எங்கள் குழந்தையை..........என்று அஞ்சுகத்தின் பெற்றோர்கள் தங்களுக்குத் தெரிந்த தெய்வங்களின் பெயர்களை எல்லாம் வேண்டிக்கொண்டார்களென்றே கூறலாம். இக்காரணத்தினால் இவர்கள் அடைந்த மனவருத்தமோ மிகவும் அதிகம்.



அன்றொருநாள் அடுத்தவீட்டு சானுப்பாட்டி அஞ்சுகத்தைப் பார்த்துப்போவதற்காக ஹரிகேசம்பிள்ளையின் வீட்டிற்கு வந்திருந்தாள். துக்கமே வடிவாக அமர்ந்திருந்த அஞ்சுகத்தின் பெற்றோர்கள் அவளை அன்புடன் உபசரித்து பூங்கொடியெனத் துவண்டுகிடந்த தங்களது குழந்தையைக் காண்பித்து அழத்தொடங்கவே, அந்தக்கிழவி அவர்களைத் தேற்றி பின்வருமாறு கூறலானாள்.

ஐயோ! கொளந்தை ரொம்பவும் கவலைப்படுது. எனக்கு முன்னமே சொல்லி இருந்தா எதாலும் வழிபோட்டுக் கொடுத்திருப்பேனே! வேறொண்ணுமில்லை! நம்ம சிவாலயத்து குருக்களய்யா அவாளை அழைச்சு இதுக்கு வேண்டிய அருச்சனை கிருத்தியங்களைச் செய்யச்சொல்லிப்பூட்டா தீர்ந்து பூடுத்து. இது தெரியாமே கொளந்தையை இப்படி எலும்புந்தோலுமா பண்ணிப்பூட்டிங்களே என்றாள். அவ்வளவுதான். அடுத்த நாளே சாஸ்திரிகள் ஹரிகேசம்பிள்ளையின் முன்பு நகை முகத்துடன் காட்சி அளித்தார். ஆரம்பத்தில் கூறிய சம்பாஷணையின்படி இவர் கோரிய தொகை கொடுக்கப்பட்டது. ஆலயத்திற்குச்சென்று ஓம் சுவாகா.....போட்டுவிட்டு சாஸ்திரிகள் அந்த தொகையை சொந்தத்தில் உபயோகித்துக்கொண்டதை நேயர்களுக்குச் சொல்லவும் வேண்டுமோ?

பத்து நாட்கள் பறந்து சென்றன. அஞ்சுகத்தின் வியாதி அடங்கியபாடில்லை. சில பாட்டிமார்கள் கூறியபடி நாவித நல்லதம்பிப் பண்டிதனை அழைத்துவந்து காட்டினால்தான் இந்த ஜுரம் சொஸ்தமாகுமென்று ஹரிகேசம்பிள்ளைக்குத் தென்பட்டது. அப்பொழுது அவர்கள் ஊரில் அந்த நாவிதப்பண்டிதனுக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டிருந்தபடியால் பிள்ளை அவர்கள் அப்போதே அவனுக்கு ஆளனுப்பி தன் வீட்டிற்கு வரவழைத்தார். அவன் வந்து அஞ்சுகத்தின் கையைப் பட்டுத்துணிபோட்டுப் பிடித்துப் பார்த்துவிட்டு இது மகா பொல்லாத பித்த சொரம். இத இப்படிக் கவனிக்காமே உட்டதே ரெம்ப பெசகு. எனக்குமுன்னமே சொல்லியிருந்தா ஒரேநாள்ளே இதை ஒழிச்சிருப்பேன். இப்ப ரொம்பவும் பித்தம் மீறிப்போச்சு. இருந்தாலும் இதஇப்பவும்

சாமானியமா உட்டுடமாட்டேன்! இந்த சொரத்துக்கு அனேக சாத்தியங்களை பொறசொல்லி இருக்கு. அதன் படி செய்ய முப்பது ரூபாயிக்குக் கொறையாமெ ஒணும். அம்மா தேகம் இப்பலெ ரொம்ப மெலிஞ்சு போச்சு கவனிக்கலேயின்னு உசுருக்கே ஆபத்துதான். என்னமோ அம்மா நான் சொல்றதை சொல்லிப்புட்டேன்! சௌக்கியமானபெறகு மனசுப்படி கொடுங்க. ஒங்க இஷ்டம் என்று நயமாக இயம்பினான். நாவிதன் கூறி முடிப்பதற்குள், ரூபாய்கள் அவனது மடியினில் நிறைந்தன. அஞ்சுகத்தின் உடலிலோ வியாதி விளையாடியது. ஏனெனில், மருந்து செய்துகொண்டு வருவதாகப் பணம் வாங்கிச்சென்ற நல்லதம்பிப் பண்டிதன் திரும்பி இவர்கள் வீட்டிற்கு வந்தால்தானே! அந்தோ பூர்ண சௌக்கியத்துடன்! புத்திளமைபெற்று விளங்கிய அஞ்சுகத்தின் பொன்னிறமேனி ஒளிமழுங்கி எலும்புந் தோலுமாகக் காட்சி அளித்தது. இன்பப் புன்னகைகள் எழிலுடன்விளங்கும் அன்பின்முகம், இருளடைந்து, மாசு படிந்து, மிரள மிரள விழிக்கும் மருண்ட கண்களைச்சுழற்றுவதாயிற்று.

தமது மகளின் சுரம் நாளுக்குநாள் அதிகரித்து வந்ததைக் கண்ணுற்ற அந்தப்பேதை—சாவித்திரி அம்மாளின் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணலாயிற்று. ஏதோ கொடும் பிசாசுதான் பிடித்துக்கொண்டு கண்ணுமகளை இப்படியெல்லாம் ஆட்டிவைக்கிறது என்று பயந்து அவள் கடைசியில் தமது கணவனுடன் சேர்ந்து ஆலோசித்து ஒருமுடிவிற்கு வந்தாள். அதாவது அடுத்த ஊரில் வசித்துவந்த, மாந்திரீகத்திற் சிறந்த மகாயோகி அவர்களை அழைத்து வந்து, தெய்வசான்யத்யம் மிளிரும் பூஜைகள் செய்து தெய்வங்களுக்கு பலிகளும் கொடுத்து வியாதியைத்தீர்த்து வைக்கும்படி வேண்டிக்கொள்ள வேண்டுமென்று கூறவே, பிரேரணை ஏகமனதாய் நிறைவேறியது!

ஆஹா! அகன்ற நெற்றி, அதிலொரு நாமம்; அதற்கு மேல் அக்ஷதை; மஞ்சள்பூசிய அரிசிகலந்த சந்தனப்பொட்டு; கரிப்பொட்டு; கம்பீரமான முகம்; நீண்டு வளர்ந்து சற்று சுருண்ட தாடி; செழித்த மீசை; சற்று எடுப்பான மூக்கு;



கரிய கூர்மையான விழி; ஒற்றை ருத்ராக்ஷம் விளங்கும் அகன்ற காதுகள்; அடர்ந்து சுருண்டு தோள்வரையில் மடங்கிநிற்கும் கேசம்; விதவிதமாய்ப் பிரகாசிக்கும் ருத்ராக்ஷ ஸ்படிகமாலையுடன்விளங்கிய மார்பு; ஒருகரத்தில் ஜபமாலை; இத்தியாதி வைபவங்களுடன் மகாயோகி அவர்கள் ஹரிகேசம்பிள்ளையின் வீட்டில் காட்சி அளித்ததை நீங்கள் பார்க்கவேண்டுமே! இரவு8-மணி. தரையில் ஓர் பெரிய ரத்ன கம்பளம் விரிக்கப்பட்டிருக்கிறது. அஞ்சுகத்தை அதில அமரவைத்து, ஒரு கிழவி, அவள்கையை அசையாது கெட்டியாய் பிடித்துக்கொண்டிருக்கிறாள். இன்னும் அவள்முன் பச்சை மாவினால் செய்யப்பட்ட ஆண்பெண் உருவங்கள் இரண்டு இருக்கின்றன. பக்கத்தில் மாலைசுற்றிய வெள்ளிக் குற்றுவிளக்கு நெய்விட்டு மங்கலாய் எரிந்துகொண்டிருந்த பிரகாசமானது,பதுமைகளின் கழுத்திலணிந்திருந்த தங்கச் சங்கிலிகளை ஒளிவிட்டு பளபளவென்று மின்னச்செய்கிறது. ஒரு பெரிய தட்டில் நெல்லைக்கொட்டி, அதன்மேல் வாழை இலை போட்டு அரிசிபரப்பி, அதில் நூல சுற்றி-சந்தனம் புஷ்பங்களால் அலங்காரம் செய்யப்பட்ட வெள்ளிக்குடத்தில் மாவிலைசொருகி, மஞ்சள்பூசிய தேங்காய் வைக்கப்பட்டிருக்கிறது. தாம்பாளம் ஒன்றில் உயர்ந்த பட்டும், பத்துப் பவுன்களும் பிரகாசிக்கின்றன.வெளிவாயலில் ஒருதீங்கையும் இழைத்தறியாத இருகோழிகளும், இரு ஆடுகளும் தலை துணிக்கப்பட்டுக் கிடக்கின்றன. இந்த நிம்மதியான இரவில் மகாயோகியானவர் தமது உடுக்கையைத் தட்டிக்கொண்டே கூறலானார்.

நீங்க வரும்போதே அம்மாளே சுடுகாட்டு வழியிலே அழச்சுவந்திருக்குறீங்க! பம் .... பம்.... பம் .... அங்கே இருந்த முனியாண்டி கொளந்தையை பலமாப் புடிச்சுக்கிட்டான். இந்த பிரம ராக்ஷசன் விலகாதுன்னு பம்...பம்... இப்ப இந்த பதுமை நடக்கவேணும்! பம்....பம்....பம்....பம் ஹா! ஹா! என்ன ஆச்சரியம்! பதுமைகள் மெள்ள நடந்து போய்க்கொண்டிருந்தன! ஐயோ! இவர்தெய்வத்தின் அம்சம் என்று சுற்றியிருந்தவர் எல்லோரும் ஏககாலத்தில்சொல்லிக் கொண்டார்கள். மந்திரமென்றால் சாமானியமா? எல்லோரும் கைகுவித்து ஆனந்தக்கண்ணீர் வடித்தார்கள். அந்தச்சம

யத்தில் யாரோ பூஜைஅறைச்குள் நுழைந்ததை ஹரிநேசம் பிள்ளை பார்த்துவிட்டார். கண்டதும் திகைத்தெழுந்து நின்றார். அவர் பக்கத்திலிருந்தவர்களும் திடுக்கிட்டனர். இரவு எட்டு மணிக்குப்பின் இவர் வருவாரென்று அவர்கள் எதிர்பார்க்கவே இல்லை. அறையினுள் நுழைந்தவர் அஞ்சுகத்தின் அன்பனாகிய சுகுமாரனே! தெய்வசான்யத்யம் எரிச்சுப் புடுமே! குளிக்காமே முழுகாமே உள்ளே நுழைஞ்சுட்டாரே என்று முணுமுணுக்கிக்கொண்டாள் ஒரு கிழவி. பாவிப் பயல் பூஜைவேளையில் கரடிமாதிரி வந்துட்டான்! நாசமாய்ப் போயிட! என்று முணுமுணுத்துக்கொண்டார் ஒரு தாத்தா. இவைகளையெல்லாம் கண்ணுற்ற சுகுமாரன், அளவிலாத கோபம் அடைந்தவனாய், இவர்கள் காட்டிய அன்பின்பயனாய் தமது ஆருயிர்க்காதலி அடைந்த நிலைமை கண்டு கண்ணீருகுத்து, இவர்கள் மூடத்தனத்திற்கு வருந்தி, தான் இவ்வளவுகாலமாய் வந்து கண்டு அழைத்துப்போகாமல் விட்டுவிட்டதற்காக தன்னைத்தானே வெறுத்து, இவைகளுக்கிடையில் நகர்ந்து போய்க்கொண்டிருந்த பதுமைகளைப்பார்த்து அடங்காச்சீற்றம் மிகுந்தவனாய் தனது காலால் அதை ஒரு உதை உதைத்தான். எல்லோரும் ஹா! ஹீ! ஹூ! என்று கூவினார்கள்! பதுமை மாவெல்லாம் சிதறுண்டுபோகவே மந்திரவாதி, தம் கைவசத்தில் வளர்த்துவரும் மூஞ்சூறு எலி, மாவினுள்ளிருந்து, கீச் என்று கத்திக்கொண்டு வெளியே ஓடியது. அவ்வளவுதான்! மந்திரவாதி மாயமாய் ஓடி மறைந்தான்! ஏமாற்றம் அடைந்த எல்லோரும் மந்திரவாதியைத் திட்டிக்கொண்டே வெளியில் சென்றார்கள்.

ஆனந்தமான இரவு கிருஷ்ணபக்ஷத்து சந்திரன் தனது வெள்ளிய கிரணங்களைப் பொழிந்துகொண்டிருக்கிறான். வானத்தில் அங்குமிங்கும் விளையாடிக்கொண்டிருக்கும் மேகங்கள், பனித்துளிபோன்ற சிறிய நீர்த் திவலைகளைத் துளிக்கின்றன. வீட்டு வாதாமரத்து இலைகளில் சந்திரனது



ஒளிபடிந்து பளபளவென்று மின்னச்செய்கிறது. இளந்தென்றல் அதன் மலர்களின் நறுமணத்தை அளைந்து வந்து தவழ்கிறது. இப்போது நமது அஞ்சுகம் தமது கணவன் வீட்டில் ஆனந்தமாக தனது ஆருயிர் அன்பனுடன் உரையாடிக்கொண்டிருக்கின்றாள்! மாமியார்வீட்டிற்குவந்த மறுநாளே சுகுமாரன் தன்னுடன் அஞ்சுகத்தை அழைத்துவந்து தமிழ்வைத்தியத்தில் பேரும்புகழும்படைத்தவரான வைத்தியநாதம் அவர்களைக்கொண்டு தகுந்த சிகிச்சை செய்வித்ததால் பூர்ண ஆரோக்கியத்துடன், புத்திளமைபெற்று விளங்கிய அஞ்சுகத்தின் பொன்னிறமேனியில், சௌந்தரியத்தின் நவமோகன சக்தி ததும்பிக்கொண்டிருந்தது! சரத் காலத்தில் நீர் நிறைந்த வயல்களில் மந்தமாருதத்தினால் அசைந்தாடும் இனியமலர்களைப்போல் அவளது சுந்தரவதனத்தில் இன்பப் புன்னகைகள் ஒளிவீசி மறைந்துகொண்டிருந்தன! சுகுமாரனுக்கு அவளைக்கண்ணுறுந்தோறும், ஜுரத்தினாலும் இதனால் அவளது பெற்றோர்களாலும் அடைந்த துன்பமும், பின்பு தன்னுடைய அளவிலா அன்பினால் தமிழ் வைத்தியத்தின் திறமையால் சம்பூர்ண சௌக்யமடைந்து, இனிய வெண்மலர்கள் நிறைந்த முல்லைக் கொடியொன்று பொழுது புலரும் வேளையில், காலைப்பனித் துளிகளைப் பொழிவதுபோல் அஞ்சுகம் காட்சி அளித்தாள். உள்ள மகிழ்ச்சியினாலும், அளவிலா அன்பினாலும், கொஞ்சும் மொழி அஞ்சுகத்தை, இருகைகளாலும் வாரி அணைத்து, அவளது கன்னங்களில் அளவிலாத முத்தங்களைப் பொழிந்தான் சுகுமாரன். அஞ்சுகத்தின் கண்கள் கிருதக்ஞையுடன் துடித்தன. ஆனந்தத்தால் அவளது அகமும், முகமும் ஒருங்கே மலர்ந்தன.

---

# மாதர் பகுதி.

## பலதாரமணம்.

(தோழர், A. B. ஆதித்தர்)

இமையமுதல் குமரிவரையில் பாஞ்சாலிகளும், பார்த்திபர்களும் எக்காலமும் பலுகிப்பெருகி வாழ்ந்து வருகிறார்கள். உதாரணமாக, திபேத்தில் ஒரு பெண்ணைப் பலர் மணக்கிறார்கள். சாதாரணமாக ஒரு குடும்பத்தில் மூத்த பிள்ளை கல்யாணம் செய்துகொண்டால் இரண்டு மூன்று மாதங்களுக்குப்பிறகு அவன்மனைவி மற்ற இளையசகோதரர்களுக்கும் மனைவியாகிவிடுகிறாள். அதோடு அந்தப்பிள்ளையின் தகப்பனார் பெண்டிழந்திருந்தால் அந்தப்பெண் அவருக்கும் மனைவியாகிறாள். வயதுவந்த பெண்களுடைய ஒரு விதவையை ஒருவர் மணந்துகொண்டால் அந்த விதவைமட்டுமின்றி அந்தப் பெண்களும் அவருக்கு மனைவிமார்களாகக் கருதப்படுகிறார்கள்.

பஹூச்சியரிடை இறந்துபோனவர்களின் மனைவியை அவர்களுடைய வார்சுகளுக்குக் கொடுத்துவிடும் வழக்கம் இருக்கிறது. கொலையாளியின்சகோதரிகளையும், புத்திரிகளையும் கொலையுண்டவரைச் சேர்ந்தவர்கள் எடுத்துக்கொள்வதும் வழக்கமாக இருக்கிறது. குழந்தைகள் பிறக்குமுன்னமே அவர்களது விவாகத்தை நிச்சயப்படுத்திக்கொள்வதும் வாடிக்கையாக இருக்கிறது.

நீலகிரியில் தொதவர்களுக்குள் ஒரு பெண் ஒரேகாலத்தில் பல புருஷர்களுக்கு மனைவியாயிருக்கும் வழக்கமிருக்கிறது. மற்றொருவன் அவளை விரும்பினால் அவளுடைய புருஷனது சம்மதத்தின்பேரில் அவன் அவளை மணந்து வாழலாம். இரண்டு மூன்று சகோதரர்களும் ஒருத்தியை மணந்து வாழ்கிறார்கள். அவர்களுள் மூத்தவனே மணச்சடங்குக்குரியவன். ஒவ்வொருவரும் தனித்தனியாகவும்



ஆண்டுகொண்டு முறைவட்டம்போல் அவளை மனைவியாகக் கொள்வர். இதுவுமன்றி வெண்ணெய் வாங்கச்செல்லும் வியாபாரிகளாகிய வெளியாரோடு இக்காலத்தே தொதவச்சிகள் தேககசம்பந்தம் செய்வதனால் 'ஷிபிலிஸ்' என்னும் மேகவியாதி தொதவர்களிற் பெரும்பாலார்க்கு உண்டு.

நம்நாட்டில் குறவர்களுக்குள்ளும் ஒருவன் பல மனைவியைக் கொள்வதும், ஒருத்தி பல புருஷர்களைக் கொள்வதும், ஒருவன் மனைவியை மற்றவன் ஒத்திவாங்கியும், குத்தகைக் கிரயமாகக்கொண்டும் அநுபவித்து வருவதும் நடைபெறுகிறது.

மலையாள நம்பூதிரிகளுள் குடும்பத்தில் மூத்தவர்களே மணம்செய்துகொள்வதும், அவர்கள் பலதார மணம் புரிவதும், ஏனைய சோதரர்களும், சோதரிகளும் உள்ளும், வெளியும் காமந்தணிப்பதும் உண்மையேயாகும். அவர்களின் பலதார மணத்தைத் தடுப்பதாகவும், இளையவர்களும் சுஜாதிக்குள் விவாகம் கொள்ள அநுமதிப்பதாகவும், பாகப்பிரிவினைக்கு சுதந்தரமளிப்பதாகவுமுள்ள மசோதா 21—3—34-ல் தான் கொச்சி சட்டசபையில் நிறைவேறியிருக்கிறது.

இஃதன்றி விலைமாதர்களின் பகிரங்க விபசாரத்துக்கும், குலமாதர்களின் அந்தரங்க விபசாரத்துக்கும் குறைவில்லை. அதாவது அயோக்கிய ஆண்வர்க்கத்தினரின் அட்டகாசத்தால் கல்யாண வாழ்க்கையிலும், கல்யாணமற்ற வாழ்க்கையிலுமிருக்கும் கன்னி—கணிகையர், காதல்—காம, லீலைகளுக்கோர் அளவில்லை.

இவ்விதமாக இந்தியாவின் எந்தப்பாகத்திலும் திரௌபதைகளும், அர்ஜுனர்களும் இருந்து வந்தாலும், இவர்களைவிட ஊர்கள்தோறும் தசரதமகாராஜாக்களே அதிகமாக இருந்து வருகிறார்கள். கணவனிருக்க மனைவி மறுமணம் புரியக் கூடாதென்றிருக்கும் எல்லா சமூகங்களிலும் மனைவியிருக்க மறுமணம் புரிவது வெகு சகஜமாயிருக்

கிறது. இப்படிப்பட்ட கணவர்கள் ஒன்றுக்குமேல் ஐந்து மனைவிவரையும் தாராளமாக வரித்து வாழ்ந்துவருகிறார்கள். கணவன் நபும்சகனாகவோ, குடிகாரனாகவோ, பயித்தியக்காரனாகவோ, குஷ்டம், க்ஷயம், வலி நோய்களுள்ளவனாகவோ இருந்தாலும் அவளுக்கு மற்றொரு கணவனுடன் வாழ உரிமையில்லை. ஆனால் கொடிய ஆடவர்கள் பெண்களுடைய வனப்பிலும் தனத்திலும் ஆசைகொண்டு நாலைந்து மனைவியுடன் வாழ்வதுடன், பக்கத்திலும் விபசாரம் புரிகிறார்கள்.

இவ்வழக்கங்களால் இந்திய ஸ்திரீகளுக்கிழைக்கப்படும் கொடுமை செப்பத்தரமன்று. புருஷர்களுக்கே இதில் என்ன சுகம் கண்டுவிடுவார்களென்று என்னால் ஊகிக்கமுடியவில்லை. ஒரு மனைவியும், ஒரு புருஷனுமாக வாழ்ந்துமே பெரும்பாலான குடும்பங்களில் துக்கம், ஏக்கம், அடிதடி, கொலை, விரோதம், உடல்நலிவு நடைபெற்று வருகையில் ஒரு புருஷனும் பல மனைவியரும் அல்லது ஒரு மனைவியும் பல புருஷர்களும் இருந்து வாழ்க்கை நடத்துவார்களானால் அவர்களிடம் எவ்வளவு அவநம்பிக்கையும், பொறாமையும், வறுமையும், கெட்ட நோய்களும், பயங்கரமான செயல்களும் நடக்கக்கூடுமென்பதை சிறிது யோசனைசெய்து பார்க்க வேண்டிக்கொள்கிறேன்.

பிறபெண்ணை இச்சிப்பது, சொந்தமனைவிக்குத் தெரியப்படாது என புருஷன் நினைப்பதும், பிறபுருஷனை இச்சிப்பது சொந்தப் புருஷனுக்குத் தெரியப்படாது என மனைவி நினைப்பதும், தன்மனைவி பிறபுருஷனை இச்சிக்கப்படாது என புருஷன் நினைப்பதும், தன்புருஷன் பிறமனைவியை இச்சிக்கப்படாது என மனைவி நினைப்பதும் ஜீவசுபாவமாகும். இவ்வித இச்சை தப்பிதமான செய்கையாகக் கருதப்படுவதாலேயே இரகஸ்யத்தில் நடத்தப்படுகிறது. இம்மாதிரி இச்சிப்பது நியாயமாயின் அது பகிரங்கத்துக்கு வந்துதீரும். பகிரங்கமாக இவ்வித நடவடிக்கைகள் நடக்குமாகில் மனித வாழ்வுக்கும், மிருக வாழ்வுக்கும் என்ன வித்யாசமிருக்கமுடியும்? அதில் எவ்வித இன்பம் கிட்டமுடியும்? இரகஸ்யத்திலும்கூட இவ்வித இச்சைகள் நிகழாமல் தன்னடக்கத்துடனிருக்கவேண்டியது மக்கள் கடமையாகும்.



ஒருவனும் ஒருத்தியுமாக வாழ்வு நடத்துவதே சஞ்சலமாகும். ஆயின், மனைவியோடு மறுமணம் செய்து நடாத்தும் வாழ்க்கையின் அனர்த்தத்தை என்னென்றுசொல்வது! சாதாரணமாக இரண்டு பெண்டாட்டிக்காரன் படும் திண்டாட்டத்தை அண்டை வீட்டுக்காரர்கள் தெரிந்துகொள்ளலாம். கொஞ்சக்காலம் அவன் இரண்டு மனைவியிடமும் மிகுந்த நட்புக்கொண்டிருப்பான். அவர்களும் அவ்விதமே இருப்பர். இவ்வித நிலைமையில் மிகுந்த சந்தோஷமேற்படக்கூடுமென்று சிலர் நினைக்கலாம். ஆனால் சின்னாளில் ஏதாவதொரு காரணங்கொண்டு இவ்விரு மனைவியரும் ஒத்துப்போகமாட்டார்கள். அவன் ஒரு ஸ்திரீயுடன் பேசிக்கொண்டிருந்தால் மற்றொருவள் குரோதம் கொள்வாள். அவன் ஒருஸ்திரீயுடன் சிரித்துப்பேசிக்கொண்டிருந்தால் மற்றொரு ஸ்திரீ அவன் தனக்குத் துரோகஞ் செய்துவிட்டதாகக் கருதுவாள். இக்கஷ்டத்தைத் தீர்க்க அவனது ஆயுள் போதாது. பின், 314-மனைவிகளுக்குக் கணவனாயிருந்து காலந் தள்ளுபவனைப் பற்றிப் பேசுவானேன்?

மனிதன் தொடர்ச்சியாகப் பல கட்டுப்பாடுகளையுடையவனாய் இருந்தால்தான் மிருகத்தினும் மேம்பட்டவனாகக் கருதமுடியும். மற்றொரு விவாகம் செய்ய இடமிருப்பதால் ஆண்பிள்ளைகள் தவறி நடக்க இடமேற்படுகிறது. ஒருவருடைய மனைவி உயிருடனிருக்கையில் அவரை மற்றெந்த ஸ்திரீயும் மணக்கக்கூடாதென்று ஒவ்வொரு பெண்ணும் தீர்மானித்துக்கொள்ளவேண்டும். மனைவியை இழந்தவனும், கணவனை இழந்தவளும் மறுமணம் செய்துகொள்ளலாமேயன்றி தம்பதிசமேதராயிருப்பவர்கள் மறுமணம் செய்யக்கூடாதென்று சட்டத்தின்மூலம் தடுக்கப்படவேண்டும். இவ்விதம் ஏகபத்தினி விரதம் காக்கப்படுமானால் இந்நாடு நந்நாடாய் விளங்கும். இரக்கமும், அன்பும், உருக்கமும் தாண்டவமாடி அமைதி நிலவும். ஆனந்தம் பொங்கும். பொன்னாடோ, விண்ணாடோ என்று என்னாடும் போற்றும்படி ஏற்றமடையும்.

இந்தியா சட்டசபையில், பலதார மணத்தை தடுக்க வேண்டி, சில வருஷங்களுக்கு முன்னமே ஒரு மசோதா

கொண்டுவரப்பட்டிருந்தது. அந்த மசோதாவை நிறைவேற்றவேண்டுமென்று சென்னையில் கூடிய மாதர் மகாநாடும் கோரியிருந்தது. அக்கோரிக்கையை ஆதரித்து அப்போது வெளியாகிய 'சண்டமாருதம்' 26—10—31ல் தலையங்கமும் எழுதியிருந்தது.

ஆனால், சட்டசபையினரும், சர்க்காரும் இவ்விஷயத்தில் இன்னமும் நித்திரையே செய்துகொண்டிருக்கின்றனர். இது சட்டமாக்கப்பட்டு கண்டிப்பாக நடவடிக்கை யெடுத்துக்கொள்ளக் கோருவதுடன், "ஒரு கணவன் ஒரே மனைவியைத்தான் மணக்கலாம் என்ற கொள்கைக்கு விரோதமாகப் பிரசுரம் செய்யும் பத்திரிகைகளும், கட்டுரைகளும், புஸ்தகங்களும் பிரசுரிக்கப்படலாகாது" என்று துருக்கிய சர்க்காராகிய அங்கோரா சர்க்கார் புதிதாக ஏற்படுத்திய அச்சுச்சட்டத்திலுள்ள நீதியான விதியை நமது அரசாங்கத்தின் அச்சுச்சட்டத்திலும் சேர்த்து அமுல் நடத்தும்படியாக வேண்டிக்கொள்கிறோம்.

---

## சந்தாநேயர்களே!

உங்களில் பலர் எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி சித்தன் பத்திரிகையை அன்புடன் ஏற்று அதன் சந்தா அணா எட்டை மனமுவந்து அனுப்பியிருக்கிறீர்கள். அதற்காக நன்றிபாராட்டுகிறோம்.

சித்தனின் முதல் ஆண்டு முடிவடைய இன்னும் இரண்டு இதழ்களே பாக்கி இருக்கின்றன. சந்தாவும் குறைந்த விகிதந்தானே! அடுத்த சஞ்சிகை அனுப்புவதற்குள் பாக்கியிருக்கும் கனவான்கள் மணியார்டர் மூலமாகவோ தபால் ஸ்டாம்பாகவோ சித்தன் வருட சந்தா அணா எட்டை அனுப்பி சித்தனை ஆதரிப்பீர்களென்று நம்புகிறோம்.

மானேஜர்,
சித்தன், பழனி.

# கைம்பெண் கண்ணிகள்

(புதுவை, R. S. ராஜலக்ஷிமி அம்மாள்.)

'மிடிமையை தீர்ப்பதற்கு இந்தியா'—என்ற மெட்டு.

கண்ணிகள்.

மாதர் மருமணத்தை       யிந்த
மண்ணினில் கூடாதென
வாது புரிகின்றார்       மிகவே
வஞ்சனைக் காரரெல்லாம்

பாரத நாட்டினிலே       சிறு
பாவையரின் துயரம்
சீருடன் ஓதிடவே       மக்கள்
சிந்தை துடி துடிக்கும்

விதவை யென்றுசொல்லி       சிலர்கள்
வீண்வம்பு பேசுகின்றார்
இதமா யுலகினில்       விதவையர்
என்றும் அடிமை என்றார்

கன்னிப் பருவமதில்       பெண்கள்
கலங்கி வாடு வதை
உன்னியே பெற்றோர்கள்       கண்டு
உள்ளங் குளிரு கின்றார்
பெற்றதோர் மக்களுக்கு       வைதீகர்
சத்துரு வாகிவிட்டார்
பற்றி எடுத்துரைத்தால்       நம்மீது
பாதகம் பேசிடுவார்

எங்கள் பெண்களைப்பற்றி       உங்களுக்கு
என்ன கவலை என்பார்
பொங்குமவர் துயரை       உரைத்தால்
போதும் நிறுத்து மென்பார்

மூடப் பழக்கமதால்       இவ்வினை
மூண்டது என்றறியார்
கேடு விளைந்த பின்பும்       மனதில்
கிஞ்சித்தும் சிந்தித்திடார்

பொம்மை மணமுடித்து யிளம்
பூவையர் வாழ்க்கை தனை
செம்மையாய் பாழாக்கும் பெற்றோர்கள்
தெரிகுவீர் தீமை தனை
சித்தங் களித்திடவே இந்து
தேசத்தி லுள்ளவர்கள்
உத்தம மறுமணம் யியற்றி
உயர்வு காணுவீரே.

---

## ஓர் வேண்டுகோள்.

அன்பார்ந்த ஐயா!

"சம்பிரம வளம் பெருகு தென்முகவையம்பதி தழைக் கவரு சந்த்ரோதயம்;" "கற்பண கலைஞான பீடம்;" "வித்வ சாமர்த்திய இரத்ன தீபம்;" "மதுரப்பிரவாகம்;" "கற்பனை அலங்கார பிம்பம்;" சபாபூஜித திவ்யப்பிரசங்க துல்யம்" என்பனவாதிய பெயர்கள் சிறந்தும், இராமநாதபுர சேது சம்ஸ்தானம் ஸ்ரீமான் பொன்னுச்சாமித் தேவரவர்களால் தந்தப் பல்லக்கும், இரத்னகண்டிகையும், கவிச்சிங்க விருதுப்பெயரும் பெற்றுவிளங்கிய விஸ்வகுலதிலகர் பழநி மாம் பழக்கவிச்சிங்க நாவலரவர்களது ஜீவிய சரிதையைத் தமிழில் ஆங்கில முறையைத் தழுவி விரிவாகவும், ஆராய்ச்சியுடனும் எழுதி வெளியிடவிரும்பி நாவலரது சரிதசம்பந்தமான குறிப்புகளையும், தனிப்பாடல்களையும், சீட்டுக்கவிகளையும், மற்றும் பல பிரபந்தங்களையும், சேகரித்துக்கொண்டிருக்கிறேன். பொதுநலமும், தமிழபிமானமிக்க அன்பர்கள் எனது வேண்டுகோளைக்கவனித்து தங்கள் வசமுள்ள குறிப்புக்கள், சீட்டுக்கவிகள் முதலியவற்றை அடியில்கானும் விலாசத்திற்கு அனுப்பும்படி கோருகிறேன். அனுப்பப்படுமவைகளை நன்றியறிதலுடன் ஏற்று உதவிய அபிமானிகளின் பெயர்களை நூலுள் பதிப்பிக்கப்படும்.

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கலைமகள் தமிழகம்,] தமிழ்ப்புலவர் தொகுப்பாசிரியன்,
நெ. 139, தாமஸ் வீதி, கோயமுத்தூர்.



# அகத்தியர் குணவாகடம் 3000.

(சாமி, விருதை, சிவஞானயோகிகள்)

(327-ம் பக்கத் தொடர்ச்சி)

காணேநீ அதிகமாய் கண்ட தானால்
கதிப்பாக வாந்தியுடன் வெளியே தோன்றும்
பூணுவாய் அதைநிறுத்த மருந்து கேளாய்
புனிதமுடன் துவர்மருந்து செய்வா யப்பா
பேணுவாய் காரமில்லாப் போசனமுஞ் செய்து
பொல்லாத புளிபுகையுங் காரந் தள்ளி
காணுவாய் ஊன்கறிகள் அறிந்து கொண்டால்
உத்தமனே தீருமடா உறுதி காணே. (73)

## இரத்த வாந்தி.

உறுதியாய் இரத்தவாந்தி ரோக நேர்மை
உரைக்கிறேன் அதினுடைய உண்மை கேளாய்
பருதியாய் அன்னவா சயத்தி னின்று
பக்குவமாய்த் தோன்றுகின்ற இரத்தத் திற்கு
அருதியாய் இரத்தவாந்தி யென்றும் பேராம்
அப்பனே அதிலிருந்து பெலமாய்த் தோன்றும்
குருதியாய் இதுதானும் இருக் குதய்யா
கொற்றவனே குன்றுபோல் குறியைக் கேளே. (74)

கேளப்பா சடராக்கினியிற் புளிப் புளதால்
கொடியான இரத்தந்தான் கறுத் திருக்கும்
வாளப்பா இரத்தாசயந் தன்னிலே தான்
வளமான மூச்சடைப்புத் தொண்டைக் குத்தல்
நீளப்பா மார்பில் சங்கடமுங் கண்டு
நிசமான இரத்தந்தான் பின்னே காணும்
தேளப்பா கொட்டுதல் போல் இருமலுண்டாய்
சிறந்தரத்தம் வாய்நிறைய வருகும் பாரே. (75)

நிறைந்த ரத்தம் செவந்திருக்கும் சேட்மத்தோடே
நிர்சயமாய் அதன் காரணத்தைக் கேளு
மறைந்ததுபோல் தற்செயலாய்க் காண்ப துண்டு
மகத்தான மாதருக்குச் சூதகம் நின்றால்
அறைந்தோமே அவருக்குக் காண்ப துண்டு
அப்பனே இருதயமீரலில் நோய் தோன்றும்
சிறந்த இரத்தம் கருத்திருக்கும் கரியைப்போல
திறமாக உண்டாம் முன் குணத்தைக் கேளே (76)

குணமான வாந்திதான் உண்டாம் முன்னே
குவலயத்தில் பிடிப்புடனே வலி யுண்டாகி
சினத்துக்குள் வேதனையு மிகவுங் கண்டு
சிறந்த புத்தியேக்கமுண்டாய் மூர்ச்சை காணும்
மனமற்ற இரத்தத்தை ரோகி கண்டால்
மகத்தான பிரமைகொண்டு போவான் பாரு
பணப்பை போல்சில வேளை இரத்தமய்யா
பண் பாகுமதுவழியாய்ச் செல்லும் தானே (77)

சொல்லுகின்ற இரத்தம் தான் கருமையாகிச்
சிலவேளை தாரைபோல் கருத்தே தோன்றும்
அல்லல் செயும் இரத்தம் தான்குடல் நீரோடு
அணுகாம லிருந்தாக்கால் அப்பா கேளாய்
கொல்லுகின்ற இரத்தமது கருத் திராது
குடிகெடுத்த ஈரல்குடல் காபன மப்பா
தொல்லைசெய்யும் சீதபேதி இதனால் கண்டு
தோற்றுமடா இந்தநோய் தோணுந் தானே (78)

தோன்றினதோ ரின்னோய்தான் காண வேண்டிச்
சொல்லுகிறேன் மருந்துவகை நன்றாய்ப் பாரு
ஊன்றிச்செய் எலுமிச்சம் பழத்தின் சாறும்
உற்றதொரு புளிப்பாகிச் சலங்கள் தானும்



மேன்மையுடன் குளிர்ச்சியாம் அவிழ்த மீய்ந்தால்
மெதுவாக சௌக்கியங்க ளுண்டாம் பாரு
ஊண்போல வாளைத் தான் முன்னாலப்பா
உறுதியாய் லங்கணமாய்ப் போடுவாயே. (79)

## இரத்தப் பிரமேகம்.

போடுவோம் இரத்த பிரமேகந் தன்னை
பொங்கமுடன் சொல்லுகிறேன் பண்பாய்க் கேளு
மூடுவாய் மூத்திரக் குண்டிக் காயிலேனும்
முக்கியமாய் மூத்திரத்தின் பையி லேனும்
நாடுவாய் மூத்திரத்தின் குழலி லேனும்
நலமான கல்லுத்தா னிருப்ப தாலே
தேடுவா யிடுப்பின்மேல் அடிபடுவ தாலும்
தெளிவான உஷ்ண நோயால் வருகுந் தானே (80)

தானான மாதர்கள் தான் விலகும்போது
தக்க ரத்தம் மூத்திரத்தோ டுண்டாமய்யா
தேனான இரத்தமுடன் சேர்ந்த மூத்ரம்
தெளிவற்றுக் கலங்கலாய்க் கருத்துக்காணும்
மானான குண்டிக் காயிருந்து வந்தால்
மகத்தான மூத்திரத்தில் இரத்தம் காணும்
ஊனான மூத்திரப் பையிலிருந்து காணில்
உத்தமனே முதல் மூத்ரந் தெளிவாம் பாரே. (81)

தெளிவான மூத்திரந் தானான பின்பு
தேனிறங்கும் வகைபோல இரத்தங் காணும்
ஒளிவாக அதினுடனே சீயுங்காணும்
உத்தமனே நீர்த்தாரை ரத்த முண்டாம்
முளைப்பாக இவர்களுக்கு மருந்தே தென்றால்
முக்கியமாய் துவர்மருந்து உள்ளுக் கீய்ந்து
அளியான புண்ணுக்குத் துவர்நீர் விட்டால்
அப்பனே சவுக்கியம் ஆகும்பாரே. (82)

## பெரும்பாடு

பாரேநீ பெரும்பாடு வரும் வகையைக்கேளாய்
பக்குவமாய் வருகின்ற கண்டமாலை
உரேநீ மூத்திரத்தின் குண்டிக்காய் நோய்
உத்தமனே பீலிகா ரோகந் தானும்
தேரேநீ நாட்பட்ட பாண்டு ரோகம்
தெளிவாக இந்த ரோகந் தன்னாலய்யா
சீரேநீ சினைப்பைக்கும் கருப்பைக்குமப்பா
சிறப்பாக அதிகரத்தம் பெருங்காணே (83)

காணுவாய் சூதகம் வெளியாகுமய்யா
கருப்பைதான் அழலை கொண்டு போவதாலே
பூணுவாய் சம்போக மதிகத்தாலும்
பொல்லாத புத்துகளாற் கட்டியாலும்
பேணுவாய் பெரும்பாடுண்டாமென்று
பெலமாகத்தான் சொல்வாய் உலகத்தோர்க்கு
காணுவாய் அப்போது கருப்பைநின்று
கருவான இரத்தந்தான் வருகுந்தானே. (84)

வருகின்ற இரத்தந்தான் பெரும் பாடென்பார்
வன்மையுள்ள இரத்தந்தா னதிகமானால்
தெரிகின்ற நாளினிலே நின்றிடாமல்
திரேகத்தில் சிலநாள்கள் வடிந்தாலுந் தான்
குறிகண்டு அதற்கு நீமருந்து கேளாய்
கொற்றவனே துவர் மருந்து வங்கமீந்தால்
பரிகொண்டு நடப்பான் போல் ரோகமப்பா
பாரைவிட்டுப் போகுமெனப் பகர்ந்தோம் பாரே 85

(தொடரும்)



# வைத்தியப் பகுதி.

## மலபந்தம்.

இதை மலச்சிக்கல் என்று சொல்லலாம். இதை ஆரம்பத்திலேயே நிவர்த்திக்க வழிதேடவேண்டும். இவ்வியாதியானது வேறு வியாதிகள் உண்டான சமயத்திலும், தனியாகவும் வரக்கூடியது. மலம் கிரமப்படி இறங்காதிருக்குமானால் அதுவே இவ்வியாதிக்கு ஆரம்பமென்று கருதவேண்டும். பிரதிதினமும் ஒரு தடவை அவசியம் மலங்கழித்தல் வேண்டும். சிலருக்கு ஒரு நாளைக்கு இரண்டு தடவை மலம் போகும். சிலருக்கு சாப்பிட்ட பிறகு மலம் போகும். இது மிகவும் கெடுதல். இம்மாதிரி அப்பியாசம் செய்துவரின் கடைசியில் அதுவே வழக்கமாக முடியும். சிலருக்கு 2, 3 நாளைக்கொருதரம் மலம் போவதுண்டு. இதனால் ஜீரணக்கருவிகளின் தொழில் கெட்டு சுகக்கேடு உண்டாகும்.

### வியாதியின் குணம்.

வயிறு மந்தமாகும், மூத்திரம் குறையும், உடல் வரட்சியாகும், பசியிராது. மலம் வெளுத்து களிமண்போல் இருக்கும், துர் வாசனை வீசும். முகக்களை மாறும். வியாதி மீறினால், சோம்பல் காணும். தலைவலி, வயிற்றுவலி, நெஞ்செரிவு, இருதயத்துடிப்பு, குலை பதைத்தல், மயக்கம், காய்ச்சல், மூலமுளை, தூக்கமின்மை, அசதி முதலியன உண்டாகும். உடலெல்லாம் குத்தலும் குடைச்சலும் காணும், வாய்நாறும்

### வியாதியின் காரணம்.

மலச்சிக்கலினால் குடலிலுள்ள விஷநீர்கள் திருப்பவும் இரத்தத்தில் சென்று இரத்தத்தோடுகலந்து உடலெங்கும் பரவுகிறது. வயதுசென்றவர்களுக்கும், வியாதியால் உடல் மெலிந்தவர்களுக்கும், சூதகவியாதியுடைய பெண்டீர்க்கும், மலபாதைக்குக் கிரமமாய்ப் போகாமல் அலட்சியமாயிருப்பவர்களுக்கும், அதிகநேரம் உட்கார்ந்து வேலை செய்பவர்கட்கும் இவ்வியாதி உண்டாகும். மலம்சேர்ந்து இறுகி பித்தநீர்வருகிறவழியை அழுத்திக்கொண்டால் பஞ்சக்காமாலை ரோகமுண்டாகும்.

## சிகிச்சை.

மலபந்தமுடையவர்கள் உஷ்ணத்தைத் தரக்கூடிய அல்லது அதிக பேதியாகக்கூடிய மருந்துகளைச் சாப்பிடக் கூடாது. பழங்கள், மோர், தேன், இஞ்சி, புளி, அதிமதுரம், விளக்கெண்ணெய், அத்திப்பழம், தவிட்டு ரொட்டி, கோதுமைக்கஞ்சி, கீரைத்தினுசுகள், ஆப்பில், அன்னாசி, சீமைத்தக்காளி, காப்பி முதலிய மலவிசர்ஜனத்தை உண்டாக்கக்கூடிய வஸ்துக்களை உபயோகிக்கவேண்டும்.

சிற்றாமணக்கெண்ணெய், திருபலைச் சூரணம், நிலையாவரைத் துவையல் முதலியவைகளில் ஒன்றை இரவில் படுக்கப்போகும்போது உட்கொள்ளலாம். சுகபேதிக்கு சிவதை வேர்ச்சூரணம், விரேசன மிளகு, சுகபேதிமாத்திரை இவைகளில் ஒன்றைக்கொடுக்கலாம். மேற்படி மருந்துகளோடு குடலுக்குச் சக்தி தரக்கூடிய பலவிருத்தி மருந்தும் சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

மருந்துகள்மட்டும் சாப்பிட்டு ஆகாரம் கிரமமில்லாதிருந்தால் பயன்படாது. ஆகாரவகைகள் சீரணிக்கத்தக்கதாய் உட்கொள்ளவேண்டும். அன்றாடகம் கால்நடையாய் உலாவச் செல்வதும் குதிரைச்சவாரிசெய்வதும் நலம். மலம் வந்தாலும் வராவிட்டாலும் தினசரி அந்தந்த நேரத்தில் போய் உட்கார்ந்து முயற்சி செய்யவேண்டும். தினமும் குளிர்ந்த தண்ணீரில் ஸ்நானம்செய்துவந்தால் குடலுக்கு பலம் வரும்.

## மருந்து

திரிகடுகு, சீரகம், இந்துப்பு, கருவேப்பிலை, பெருங்காயம் சமஎடை சூரணம்செய்து இரவில் படுக்கப்போகும்போது திரிகடிகைப்பிரமாணம் நெய்யில்கொள்ள மலக்கட்டு நீங்கும்.

கருவேப்பிலை, நிலவாகையிலை சமஎடை எடுத்து சூரணம்செய்து இரவில் படுக்கப்போகும்போது திரிகடிகைப் பிரமாணம் தேனில்கொள்ள மலக்கட்டு நீங்கும்.

---



# மருந்து செய் பகுதி.

## தங்க பஸ்பம்.

இரண்டு விராகனிடை தங்கரேக்கை முள்ளிக்கீரைச் சாற்றில் மூன்று சாமம் அரவைசெய்து வில்லைதட்டி உலர வைத்து அகலிலிட்டு மேலகல்மூடி சீலைமண்செய்து 100 எருவில் புடமிட்டு எடுத்து மறுபடியும் அவரையிலைச்சாறுவிட்டு 50 எருவில் புடமிட்டு எடுத்து பவுடர்செய்து புட்டியில் வைத்துக்கொள்ளவும்.

அளவு:- வேளைக்கு 2-அரிசியெடை வீதம் நெய் அல்லது வெண்ணெயில் சாப்பிடவும்.

உபயோகம்:- உடல்பலம், இரத்தவிருத்தி, தாதுபுஷ்டி, வீரியவிருத்தி இவைகளைக்கொடுத்து வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நரம்புத்தளர்ச்சி முதலியவைகளை நீக்கும்.

குறிப்பு:- சி. எம். சாமி, காமரூபி லேகியத்தில் தங்கபஸ்பம் வைத்துச்சாப்பிட்டால் அபார தாதுபுஷ்டியைத்தரும்.

## நேத்திர வியாதிக்கு

பொன்னாங்காணிவேர், கற்றாளைவேர், கடுக்காய், இவைகளைச் சரிஎடை எடுத்து புளியிலைச்சாறுவிட்டு அரவைசெய்து மாத்திரைகளாக்கி நிழலில் உலரவைத்துக் கொண்டு முலைப்பாலில் உரைத்துக் கண்களில் போடவும்.

உபயோகம்:- கண்வலி, கண்சிவப்பு, கண்ணில் நீர் வடிதல் கண்ணெரிச்சல் முதலியவை குணமாகும்.

## மேற்பூச்சு மருந்து.

புரசன் விதையை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துப் பூசலாம்.

கருஊமத்தை இலையை அரைத்து வெண்ணெயில் குழைத்து பூசவும்.

உபயோகம்:- சிரங்கு, படர்தாமரை, எச்சிற்றழுப்பு, வண்டுகடி முதலியன குணமாகும்.

## உஷ்ண சாந்திக் கஷாயம்.

| | | |
|---|---|---|
| தாமரைப்பூ மகரந்தம் ரூபாயெடை | | $\frac{1}{2}$. |
| அதிமதுரம் | ,, | $\frac{1}{4}$. |
| சிறுநெரிஞ்சில் | ,, | $\frac{1}{2}$. |
| உளுந்துப்பருப்பு | ,, | 1. |

இவைகளைச் சதச்சு ஒரு துணியில் கட்டி $\frac{1}{4}$-படி தண்ணீரும் $\frac{1}{4}$-படி பாலும் சேர்த்து அடுப்பிலேற்றிக் காயவைத்து கால்படியாக்கி சர்க்கரை சேர்த்து காலை மாலையாக சாப்பாட்டிற்குப்பின் சாப்பிடவும்.

**உபயோகம்:-** அஸ்திச்சூடு, அஸ்திவெட்டை, தேக அழலை பித்தச்சூடு முதலிய பலவகைச்சூடுகள் தணியும்.

## ஆடாதோடை லேகியம்.

ஆடாதோடை சமூலம் ரூபாயெடை 30. மிளகு, கொத்தமல்லி, அரத்தை, சுக்கு, அதிமதுரம், தாளிசபத்திரி இந்துப்பு, பேரரத்தை, கோஷ்டம், கருஞ்சீரகம், கடுகுரோகணி, அதிவிடயம், நாகப்பூ, வாலுளுவை, கிராம்பு வகைக்கு ரூபாயெடை 3. இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து எடுத்துக்கொண்டு, 40-ரூபாயெடை சீனி கற்கண்டுத்தூளை பாகுபதத்தில் காய்ச்சி அதில் மேற்படி வஸ்திரகாயஞ்செய்த பவுடரைப்போட்டு கிளறி நெய்விட்டு சூடு தணிந்தவுடன் தேன்விட்டு எடுத்து ஜாடிகளில் வைத்துக்கொள்ளவும்,

**அளவு:-** வேளைக்கு கழிச்சக்காய்ப் பிரமாணம் காலை மாலையாக நாள் ஒன்றுக்கு 2-வேளை வீதம் உட்கொள்ளவும்.

**உபயோகம்:-** இருமல், ஈளை, மந்தாரகாசம், தொண்டைக் கம்மல், ஜலதோஷம், சுவாச சம்பந்தமான வியாதிகள் குணமாகும்.

**குறிப்பு:-** மேற்சொன்ன லேகியத்தில் தாளகபஸ்பம் வைத்துச்சாப்பிட்டுவரின் சுவாசகாசரோகம் எவ்வளவு கடினமானதாயிருந்தாலும் விரைவில் குணமாகும்.



# மூலிகைப் பகுதி.

## நிலவேம்பு.

இது ஒரு கீர்த்தியான பலன் கொடுக்கும் ஔஷதமாக இருக்கிறது. இதுமலைப்பாங்கான இடங்களில்ஏராளமாய்வளரும். இதைக்கஷாயமிட்டு அதாவது $\frac{1}{2}$-படி தண்ணீர்விட்டு $\frac{1}{8}$-படியாக வற்றவைத்து வடிகட்டி வேளைக்கு 2-அவுன்ஸ் வீதம் நாளொன்றுக்கு காலை, மத்தியானம், மாலையாக 3-வேளை கொடுத்தால் சாதாரண ஜுரம் விலகும். இதனுடன் கிராம்பு, கருவாப்பட்டை, ஏலம் வகைக்கு $\frac{1}{4}$-ரூ. எடை எடுத்து சதைத்துக்கூட்டிக்கொண்டால் சாரம் அதிகமாகும். எல்லாப் பலவீனங்களுக்கும், முக்கியமாய் ஜுரம் உண்டான பின்னிருக்கும் பலவீனத்திற்கும், அஜீரணத்திற்கும், அக்கினிமந்தத்திற்கும் சீதபேதிக்கும் கொடுக்கலாம். குளிர் ஜுரத்திற்கும், முறைக்காய்ச்சலுக்கும் இக்கஷாயம் நல்ல பலனளிக்கும்.

வாதசுர நீரேற்ற மாற்றுஞ் சுரதோஷங்
காதமென வோடக் கடியுங்காண்—மாதரசே
பித்தமயக்கறுக்கும் பின்புதெளிவைக் கொடுக்குஞ்
சுத்தநில வேம்பின் றொழில்.

(பதார்த்தகுண சிந்தாமணி

ஆனைநெருஞ்சி,நிலவேம்பு,கருந்துளசி சமஎடைஎடுத்து $\frac{1}{2}$-படி தண்ணீர் விட்டு $\frac{1}{4}$-படியாக்கி காலை மாலையாக நாள் ஒன்றுக்கு இருவேளை வீதம் உட்கொண்டால் நீர்க்கோவை பாண்டு குணமாகும்.

நிலவேப்பு, ஆரஞ்சிப்பழத்தோல்,கொத்தமல்லி விதை வகைக்கு ரூபாயெடை ஒன்று எடுத்து மேற்சொல்லியபடி கஷாயமிட்டுக்கொடுக்க பித்தமயக்கம், கிறுகிறுப்பு, பித்த சுரம் முதலியன குணமாகும்.

நிலவேம்பு இலையோடு அரிசிமா சமனெடைகலந்து அரைத்து ரணங்களுக்குப் போடலாம்.

நிலவேம்பு, ஓமம், மிளகு, வசம்பு, பூண்டு சமனெடை சேர்த்து அரைத்துக்கொடுக்க அஜீரணம், புளித்தேப்பம் வயிற்றுப்பொருமல் நீங்கும்.

# நாடகப்பகுதி.

## நாகானந்தன்.

(லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது)

(332-ம் பக்கத்தொடர்ச்சி)

அங்கம் 3] [களம் 1

அப்பா சாஸ்திரி. குப்பா சாஸ்திரி.

காலம் — மாலை. இடம் — பொற்றாமரைக்கரை.

அப்பா சாஸ்திரிகள்:— யார் அங்கே? குப்பா சாஸ்திரிகளா; நல்ல வேளை; எங்கே மதயானையால் கொல்லப்பட்டீரோ என்று பயந்தேன். தெய்வாதீனமாய்த் தப்பிப் பிழைத்தீரே ஓய்.

குப்பா சாஸ்திரிகள்:— ஓய்! ஓய்! அப்பாசாஸ்திரிகளே! ஓடி வரும்போதே நாலாமூலையும் தங்களைத் தேடினேன். எங்கும் தட்டுப்படவில்லை. உங்கள் காலம் ஆய்விட்டது என்றே நிச்சயப்படுத்திவிட்டேன். இன்றோ சுக்கிரவாரம். அதிலும் சாயங்காலம். இழவு விசாரிப்பது உசிதமல்ல. நாளைக்காலையில் உதயாத் பூர்வமே வந்து உமது ஆம்படையாளையும், ஜேஷ்ட புத்திரனையுங்கண்டு இழவு விசாரித்துவிட்டு, சஞ்சயனத்திற்கு புட்டுத்தோப்பிற்கும் போகலாம், இரண்டொருபணம்வரும்படியும்வருமென்றிருந்தேன். வரும்படி போனாலும் போகட்டும். நீங்கள் பிழைத்தீர்களே அதுவே போதும். எப்படி ஐயா தப்பினீர்கள் யானைக்காலில் மிதிபடாமல்?

அப்பா சாஸ்திரிகள்:— ஹரிஹரி! என்னசொல்லட்டும் தப்பினவழியை. மதயானை நாங்களிருந்த திக்கு நோக்கி ஓடி வருவதைப் பார்த்தேனோ இல்லையோ கால் மண்ணைத் தட்டிவிட்டு எடுத்தேனையா ஓட்டம். என்னெதிரில் பட்ட குழந்தைகள் காலால்தட்டுண்டு குட்டிக்கரணம்போட்டுங்கூட



குழக்கே விழுந்தன. உயிர்தப்பினால் உப்பு மாறியாவது தின்னலாமென்று எண்ணி அவைகளை எடுக்காமல் மிதித்துக்கொண்டுகூட ஒரே ஓட்டமாய் ஓடி வந்தேன் வீடு. பிழைத்தது பிரம்ம பிரயத்தனம். நீங்கள் எப்படித் தப்பினீர்கள்?

குப்பா சாஸ்திரிகள்:— ஓய்! அதை ஏன் கேட்கிறீர்கள்? எங்களை நோக்கிவந்தயானை வேகமாய்த்திரும்பிற்றையா பெண்கள் இருக்கும்பக்கம். உடனே குய்யோமுறையோ என்ற சத்தத்துடன் அவர்களும் நாலாபக்கமும் பறந்தனர். யானை வீரிட்டு இடசாரியாய்த்திரும்பி சுகுணசுந்தரியும் அவள் தோழிகளும் வீணாகானம் செய்துகொண்டிருந்த பக்கம் நடந்தது. பொல்லாதவேளையாய் சுகுணசுந்தரி அதன் எதிர்ப்பட்டாள். வாரி எடுத்து அவளைத் துதிக்கையால் உயரத்தூக்கிக்கொண்டு எடுத்ததையா ஒரே ஓட்டம். இருந்தவர், வந்தவர், போனவரெல்லாம் ரோதனத்திற்கு ஆரம்பித்துவிட்டார்கள். அந்த சமயத்தில் யானைக்கு எதிராக சுந்திரகுமாரனும் பின்னாக நாகானந்தனும் ஓடிவந்தார்கள். இரண்டு அள்ளையிலும் இரண்டு மாவுத்தர்கள் கொம்பன்களில் ஏறிவந்தார்கள், பாலா கொண்டு குத்தினார்கள். இரண்டு கொம்பன்களும் முன்பின் கால் சங்கிலிகளைப்பிடித்திழுக்க மதயானை பிரமித்து ஸ்தம்பம்போல் நின்றது. ஏறினார்கள் சுந்திரகுமாரரும் நாகானந்தரும் முன்னும் பின்னுமாய். நாகானந்தர் முதுகில் வந்து தந்திரமாய் சுகுணசுந்தரியைக் கையிற்றாங்கினார். சுந்திரகுமாரர் அங்குசங்கொண்டு யானையின் உடம்பில் குத்தினார். விட்டது யானை சுகுணசுந்தரியை — வாரியெடுத்தது சுந்திரகுமாரரை — வீசி எறிந்தது முன்புறம் நோக்கி. பொத்தென்று விழுந்தார் சுந்திரகுமாரர். எங்கு அடிபட்டதோ தெரியவில்லை. ஸ்தம்பம்போல் மூர்ச்சையாய்க்கிடந்தார் தரையில். அவரை மெத்தென தூளியிற்றாங்கிப்போயினர். மாவுத்தர்கள் மதயானையைப் பின்னும் சங்கிலிகொண்டு மரத்தில் கட்டினர். சில தோழியர் வந்து சுகுணசுந்தரியைத்தாங்கி வாங்கினர் நாகானந்தர் கையினின்றும். அவளைத் தந்தப்பல்லக்கிலேற்றி மெல்லப்போயின அரண்மனை. பின்னால் கூட்டமும் கலைந்தது. நானும் வந்தேன் பொற்றாமரை. நாளை எங்கேயாவது விசேஷமுண்ட

என விசாரிக்க. இன்றைக்குத்தானா அந்தப்பாழும் யானைக்கு மதம் பிடிக்கவேண்டும். என்ன வைபவம்! இந்திரன் விழா.

அப்பா சாஸ்திரிகள்:— ஓய்! இது ஒரு நாளும் நம்ம பட்டணத்தில் நடக்காத திருவிழா. இது வருஷாவருஷம் காவிரிப்பூம்பட்டிணத்தில் நடக்குமாம். வீராதிவீரன் பிரதம சேனாதிபதி நாகானந்தன் சோனாட்டை ஜயித்து இராஜசேகரியை சிறைப்பிடித்ததற்காக நமது நகரில் புதிதாய் ஏற்படுத்தப்பட்டதாம். வைகையாற்றின் கரையில் விசாலமான தோப்பின் மத்தியில் இந்திரன் பூஜாமண்டபம் நிர்மாணித்துளது. அம்மண்டபத்தின் காலகள் நவரத்னகசிதமான ஸ்வரணக்கால்கள்போலும் விளங்குகின்றன. மேற்கோப்போ தங்கத்தகடுகளால் மறைபட்டுள்ள மரக்கோர்வை. அதன்மேல் கோபுரமும் சிகரமும் அமைந்துள. அவை பார்ப்பவர் கண்ணைப்பறிக்கும்வண்ணம் சுடர் வீசுகின்றன. மண்டபம்முற்றும் பலவகை அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன. அதன் மத்தியில் நன்மேடையிட்டு அம்மேடையின் மீது சகஸ்திராக்ஷன் பொற்சிலையும் அதன் முன் கடமும் ஸதாபனம் செய்யப்பட்டுள்ளன. பிம்பமும் கும்பமும் நன்றே அலங்கரிக்கப்பட்டு, பன்னீர் மாலைகளாலும், முத்தார, மோகனாரங்களாலும் ஜோதிர்மயமாயுள. பரிமள புனித நீரால் நிரம்பிய அக்கடத்தின்மேல் மாவிலையமர்த்தி அதன்மேல் நாளிகேரம் வைத்து சந்தன, குங்கும புஷ்பங்களால் அழகுபெறச் செய்யப்பட்டுள்ளது. சதுர்வேதபாரங்கதரும், ஷட்சாஸ்திர பண்டிதரும், ஆகம நிபுணர்களும் ஆசனங்களிலமர்ந்து முறைப்படி இந்திரனையழைத்து, பிம்ப கும்பங்களில் ஆவாகனம் செய்து சோடசஉபசாரந்தந்து விதானப்படி பூஜை நடத்தினர். பின்பு வேதியர் வேதம் ஓதினர். அந்தண ஸ்திரீகள் மங்களம் பாடினர். அரம்பையரன்ன நடனப்பெண்கள் நர்த்தனம் செய்தனர். யாழ், குழல் முதலிய வாத்தியங்கள் ஒருங்கே ஒலித்தன. ஸ்தோத்திரப் பாக்கள் பாடப்பட்டன. ஸ்ருதிலயத்திற்கிணங்க கடையே நாதசுரம் நவநவமான ராகங்களுடன் தவில் தாளங்களுக்கு ஒப்ப வாசிக்கப்பட்டது. வந்தவரெல்லாம் இக்கண்கொள்ளாக் காக்ஷியைக்கண்டு ஆனந்தங்கொண்டனர். இவ்வித பூஜை இதுவரையான் கண்டதில்லை.



குப்பாசாஸ்திரிகள்:— சாஸ்திரிகளே! பூஜைமுடிந்ததும் தம்பதி பூஜை மகாராஜா செய்தார்களே! அவ்வித பூஜையை நம் பெரியவாள் காலத்திலாவது, எந்த இராஜாங்கத்திலாவது நடந்ததாய்க் கேள்வியுண்டா? வஸ்திரம் பத்து முழம்-சமஜோடி-காஞ்சீபுரம் அரைபாவாஞ்சி கரைகள் கண்ணைப்பறித்தது. இருக்கிறதையா மூன்றே கால் முழம் அகலம். வாழைநார்போல வழவழப்பு. முகதலவும் புறதலவும் சமகரை. புடவைகளோ கால் இறங்காதவை. கெட்டிச்சாயம், பலவித மேகவர்ணங்கள், பலவிதக்கொட்டடிகள், பலவித தண்டவாளங்கள் கூடிய உடல். இரவிக்கைகளும் அப்படியே. இவற்றுடன் வைத்த வெற்றிலைபாக்கு, மஞ்சள், குங்குமம், பழவர்க்கங்கள், புஷ்ப வகைகளுக்கு அளவுண்டோ? தக்ஷிணைகளுக்காவது கணக்குண்டோ? பூரியோ அள்ளிக்கொடுத்தார்களேயல்லாது எண்ணிக்கொடுக்கவில்லை.

அப்பா சாஸ்திரிகள்:— ஓய்! சாஸ்திரிகளே! அன்னதானத்திற்குத்தான் என்ன குறைச்சலா. ஒவ்வோர் வருணத்தாருக்கும் வெவ்வேறிடங்களில் பாகசாலை. ஒரே மாதிரி சமையல் திட்டம். பட்சியமும்அப்படியே. பாகவிதமோ நளபாகமென்றே சொல்லலாம். முப்பழம், சர்க்கரை, கூட்டு, பொடித்துவல், வறுவல், அப்பளம், வடை, குஞ்சாலாடு, மோகனலாடு, ரவாலாடு, ஜிலேபி, மைசூர்பாகு, ஹல்வா, பதிர்ப்பேணி, பாஸந்தி, குலோப்ஜான், கேசரி, ஒரு சாம்பார், ஒரு மோர்க்குழம்பு, சித்திரான்னம், சர்க்கரைப்பொங்கல், வாங்கிபாத், பகாளபாத். இவையல்லாது பச்சடி, சட்னி ஊறுகாய், உப்பலங்காய், திவ்யமான ரசம், கெட்டித்தயிர். நெய்யோ தண்ணீர்பட்டபாடு. எங்குபார்த்தாலும் போதும் போதுமென்ற சப்தம். மழைவருஷித்ததுபோல் சந்தனம். சுமக்கமுடியாத மதுரக்களிப்பாக்கு, மாந்துளிர் வெற்றிலை, தேன் ஊறும் சுண்ணாம்பு. இவற்றுடன் இலவங்கம், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, வால்மிளகு, ஏலம். நம்ம வீடுகளுக்கு கடைக்குப்போகவேண்டியது இல்லை. இவற்றோடு தேங்காய் பழமோ தூக்கமுடியவில்லை.

குப்பா சாஸ்திரிகள்:— சாஸ்திரிகளே! சற்றுப்படுத்து சிரமபரிகாரம் செய்தோமோ இல்லையோ என்ன கச்சேரி. ஒரு புறம் வாய்ப்பாட்டு, மற்றோர் புறம் வீணை. வேறோர்

பக்கம் புல்லாங்குழல். பின்னோர் புறம் ஜலதரங்கம். இவை மாத்திரமா! ஹரிகதாப் பிரசங்கங்கள், விகடவேடிக்கைகள் ஐயா இங்கிருந்தால் அங்கில்லை. அங்கிருந்தால் இங்கில்லை.

அப்பாசாஸ்திரிகள்:— இந்த சந்தர்ப்பத்தில் தானய்யா பொழுதுபோக மூன்றுநாழிகையில் பிடித்ததப்பா பட்டத்து யானைக்கு மதம். அது சங்கிலியை அறுத்துக்கொண்டு தன் மனம் போனபடி புறப்பட்டுவிட்டது. அதன் வருகை ஒரு கருங்குன்றிற்கே கால் முளைத்து நடப்பது போலிருந்தது. அதன் காலில் மிதியுண்டபேரும் பயத்தால் பொத்தென விழுந்தபேரும் எவ்வளவென்று சொல்வது. அது சென்ற வழியெல்லாம் மரங்கள் கதி அதோகதியாயின. எதிர்ப்பட்ட மரங்கள் வேர்ப்பிடுங்கலாய்ப் பிடுங்கப்பட்டு நாலாபக்கமும் எறியப்பட்டன. ஐயா! சந்தியாகாலம் ஆய்விட்டது. சந்திசெய்து அம்மன் தரிசனம் செய்யலாம். வாரும்.

(இருவரும் மறைதல்) (தொடரும்)

---


## சிறுவர் அறிவுக்கதிர்.

பாடசாலைச்சிறுவர் சிறுமியர்களுக்கு சகலவிதத்திலும் அறிவு உண்டாக்கும் இனிய எளிய நடையில் வெளிவரும் மாதப் பத்திரிகை. இன்பக்கதைகள், உலக அதிசயங்கள், பெரியோர் ஜீவியசரித்திரம், சுகாதாரம், நகைச்சுவை, தமிழ்ப் பழமொழிகள், விடுகதைகள், விநோதக்கணக்குகள், இங்கிலீஷ் பாடங்கள் முதலிய சிறுவர்களுக்கேற்ற பல விஷயங்கள் பொதிந்து, கல்விமான்களின் கட்டுரைகளைக்கொண்டு வெளிவருவது.

வருட சந்தா உள்நாடு 10-அணா.
வெளிநாடு .... 1-ரூபாய்.

ஏஜண்டுகள் தேவை.

பத்திராதிபர், தமிழ்ப்பண்டிதர், **K. J.** வேதமுத்து,
ஈரோடு. (S. I. Ry.)




# மதிப்புரைகள்.

## 'நகரதூதன்'

திருச்சி, உறையூரினின்றும் வி. திருமலைசாமி அவர்களை ஆசிரியராகக்கொண்டு ஐந்தாம் ஆண்டு முதல் இதழ் வரப்பெற்றோம். வழக்கம்போல் இதில் பல சீர்திருத்த ஆராய்ச்சிக் கட்டுரைகளும், செய்திகளும், குறிப்புகளும் காணப்படுகின்றன. அதிக பக்கங்களுடன் கூடிய "நகரதூதன்" சீர்திருத்த உலகத்தை மகிழ்விப்பதாகுக.

வருட சந்தா .... ரூ 3.

கிடைக்குமிடம்:— நகரதூதன் ஆபீஸ், உறையூர், திருச்சி.

## 'கொங்குமலர்'.

கோவைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீட்டின் பிரதி ஒன்று நமது பார்வைக்கு வந்துளது. இதில் ஆராய்ச்சிக்குறிய விஷயங்களும் பல அறிஞர்களால் எழுதப்பட்ட வியாசங்களும் காணப்படுவதோடு கொங்குமண்டலச் சிறப்பும், பண்டைய பெருமையும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இவைகள் கருத்துக்கள் நிறைந்து, செந்தமிழில் எழுதப்பட்டிருக்கின்றன. இதனை யாவரும் ஆதரிப்பார்களாக.

ஆண்டு சந்தா ரூ. 1—8—0. தனிப்பிரதி அணா 2.

கிடைக்குமிடம்:—

கோவைத் தமிழ்ச் சங்கம், வைசியாள் வீதி, கோயமுத்தூர்.

## 'சிவநேசன்'.

பலவான்குடி, ராம. கு. ராம. இராமசாமி செட்டியார் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் செந்தமிழ்த் திங்கள் வெளியீடு. இது சைவசமயக் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டும் தமிழ் முன்னேற்றங்கருதியும் வெளிவருகிறது. இதனைப் பொதுமக்கள் ஆதரிப்பார்களாக.

ஆண்டுச் சந்தா ரூ. 2—4—0.

கிடைக்குமிடம்:— சிவநேசன் ஆபீஸ், பலவான்குடி.

# 7-வது
# திராவிட வைத்திய ஸம்மேளனம்,
# ஸ்ரீ ரங்கம்.

ஐயன்மீர்,

ஷை சம்மேளனம் ஸ்ரீரங்கத்தில் மேல அடையவளஞ்சான் வீதியில் "பாபு நேதுராம் ராம்பக்ஸ் அவர்கள் மார்வாரி சத்திரத்தில்" 1935-ஹு அக்டோபர்-மீ 13, 14-ௗ ஞாயிறு, திங்கட்கிழமைகளில் (இரண்டு தினங்களிலும்) நடைபெறும்.

வைத்யரத்ந R. பரத சாஸ்திரிகள் அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

தங்கள்,

| | |
|---|---|
| வி. சுப்பிரமணியம், | Y. S. ஜகதீசய்யர், |
| திராவிட வைத்திய மண்டல பொதுக் காரியதரிசி, | வரவேற்பு சங்கத் தலைவர், |
| ஸ்ரீரங்கம். | திருச்சிராப்பள்ளி. |
| | 30—9—35. |

குறிப்பு:—

1. பிரதிநிதிகள் தங்குவதற்கு இடம் ஷை சத்திரத்திலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.
2. மருந்து கண்காக்ஷியும் நடைபெறும்.

# பூபதி செந்தூரம்.

இதை உட்கொண்டால் ஜுரம், ஜன்னி, வாந்திபேதி, வயிற்றுப்போக்கு, மகமாரி (பிளேக்) பித்தம், கிறுகிறுப்பு, சூலை, குன்மம், சுவாசகாசம், கபம், வாதம், உடல் வலி, பொருமல், அண்ட வாய்வு, சூதக வாய்வு, பக்கவாதம் முதலிய நோய்கள் நீருவதோடு பிள்ளைபெற்ற பெண்களுக்குண்டாகும் எல்லா நோய்களும், குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தங்கள், தோஷங்கள் ஜுரம், ஜன்னி, இருமல் முதலிய சகல நோய்களும் குணமாகும்.

தோலா 1-க்கு விலை ரூ. 4—0—0.
தோலா $\frac{1}{4}$-க்கு விலை ரூ. 1—0—0.

# மேகாமிர்த பஸ்பம்.

வெள்ளை நீர்க்கடுப்பு, வெப்பம், நீர்ச்சுருப்பு, மேகக் காங்கை, பலவித நீரழிவுகள், மூலக்காங்கை, என்புருக்கி நோய், உறக்கத்தில் விந்து கழிதல், நான்முகம், வாய்ப்புண் முதலிய வெப்பநோய்கள் குணமாகும்.

விராகனிடை 1-க்கு விலை ரூ. 2.

# கபகுடோரித் தைலம்.

இதை காலை மாலை இருவேளை சாப்பிட்டுவர காசம், இளைப்பு, (சுவாசகாசம்) குழந்தைகள் இளைப்பு, இருமல், மந்தம், மலக்கட்டு முதலியன நீங்கி நல்ல பசியுண்டாகும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2.
(தபால் சார்ஜ் வேறு)

கிடைக்குமிடம்:—

**சாமி, விருதை சிவஞான யோகிகள்**
சிவஞான சித்த பார்மஸி, கோவில்பட்டி.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

ஓர் இனிய தமிழ் நாவல்

## இராஜேந்திர சுந்தரி

அல்லது

## தியாகச் செல்வனின் நிரச்செயல்.

ஸ்ரீமான் ப. மு. ரா. முத்துச்சாமி ரெட்டியார்

அவர்களால் எழுதப்பட்டது

இதில் உலக வாழ்க்கை என்பது யாது? கணவன் என்பவர் யார்? நமது கடமை என்ன? என்பன போன்றவைகளையும், காதல் மணமே சிறந்ததெனப் பல மேற்கோள்களுடன் விளக்கப்பட்டிருப்பதையும், கொடுங்கோன் மன்னர் வாழும் நாட்டில் கடும்புலி வாழும் காடு நன்றே என்பதையும், பல நீதிமொழிகளையும், மற்றும் பல விஷயங்களையும் காணலாம். தமிழ் மக்களாகிய ஆண் பெண் இருபாலரும் படிக்க வேண்டியது அவசியம். சுமார் 350-பக்கங்கள் கொண்ட இந்நாவலின் இரண்டு பாகங்களின் விலை ரூ. 1-8-0 தான்.

---

## உண்மைக் காதல்

அல்லது

## பரிமளா ராகவன்

என்னும் ஓர் இனிய தமிழ் நாவல்.

ஸ்ரீமான் ப. மு. ரா. முத்துச்சாமி ரெட்டியார்

அவர்களால் எழுதப்பட்டது.

உண்மைக்காதலுக்கு அழிவில்லை என்றும் பதிவிரதா தர்மமும் சன்மார்க்கமும் சிறந்ததென்றும், பல இடையூறுகளேற்படினும் உண்மைக்காதல் வெளிப்பட்டு நிலைபெறுமென்றும், காதலருக்கேற்படும் தடைகளைத் தகர்ப்பதற்கேற்ற கருவியாகவே அக்காதல் துணைபோகிறதென்றும், பாமரரும் படித்தறியக்கூடிய எளிய தமிழ் நடையில் வெளிவந்துள்ளது.

இதன் விலை அணா 0—8—0.

தேன ...கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மரு

மானேஜர், சித்தன், பழனி.

---

குஷ்டமா? குழிப்புண்ணா?

வேறு என்ன வியாதி?

சி. எம். சாமி

# குருதாம்பிர பஸ்பம்

## சாப்பிடுங்கள்.

சர்மவியாதிகளைச் சங்காரம் செய்யும்,

கர்மவியாதிகளைக் களைந்து எறியும்.

ஆஹா! இதுவன்றோ மருந்து!

இத்தனை நாளும் அறியாதிருந்தேன் என்று ஆயிரக் கணக்கானவர்கள் புகழ்கின்றார்கள். நீங்களும் ஒருமுறை உட்கொண்டால் அவர்களைப்போலத்தான் புகழ்வீர்கள். இது உடலிலுள்ள அசுத்த இரத்தத்தை சுத்திகரித்து, ஆறாத மேகப்புண்களை ஆற்றி, தீராத குழிப்புண்களைத் தீர்த்து, திமிர்களைப்போக்கி, பத்துக்களைப் படல்படலாய் உதிர்த்து, தடிப்பு, எரிச்சல், நமைச்சல், இவைகளையும் ஓயாமல் ஒழுகிக்கொண்டிருக்கிற துர்நீர்களையும் தொலைத்து அழுகிக்கிடக்கும் பாகங்களை முன்போலாக்கி, ஆபாசமான உடலை அழகுபெறச்செய்யும்.

இவ்விழ்தம் கிரந்தி, வெள்ளை, வெட்டை, அரையாப்பு, முட்டுகளிலுண்டாகும் வீக்கம், சூலை, க்ஷயம் குன்மம், யானைக்கால், பிளவை, குஷ்டம், குறைநோய், மதமதப்பு, மகோதரம், பெருவயறு, பாண்டு, ஜன்னி, மூத்திரரோகம், விரை வீக்கம், அண்டவாதம், பீஜத்திலுண்டாகும் கட்டிகள், நீரொழுக்கு, காக்கை வலிப்பு முதலிய சகலவியாதிகளையும் நிர்மூலப்படுத்தும். மகா அருமையான முறை.

ஏராளமான நற்சான்றுகள் பெறப்பட்டது.

50-வேளைபஸ்பம் அனுபானத்துடன் ரூ. 25.

ஏழைகளுக்குமட்டும் இம்மருந்து பாதிவிலைக்குக்கொடுக்கப்படும்.

---

## மலையப்பசாமி வைத்தியசாலை,

## பழனி. S. I.

சுவாசகாசமா? க்ஷயமா?

எப்படிப்பட்ட மார்பு நோயானாலும்

சி. எம். சாமி

# தாளகபஸ்பம்

அதிவிரைவில் குணப்படுத்தும்.

இருமல் வியாதியால் கஷ்டப்படும் எத்தனையோபேர் இதை வாங்கி உட்கொண்டு சுகமடைந்திருக்கின்றனர். சுவாசகாசத்திற்கு இதைவிடச் சிறந்த மருந்து எங்கும் கிடைப்பதரிது. இது இருமல், இளைப்பு, இழுப்பு, ஈளை, கபம், காசம், மார் அடிப்பு, குரலடைப்பு, தொண்டைவலி, க்ஷயம் முதலிய சுவாசப்பை சம்பந்தமான சகல வியாதிகளையும் நீக்கும். மார்பிலும், தொண்டையிலும் ஏற்படும் ரணங்களை ஆற்றும். இருமலை நாளாவட்டத்தில் தணியச் செய்து கபத்தை அறவே ஒழிக்கும். ஒவ்வொரு சமயங்களில் சளியோடு ரத்தம் வருதல், கோழை கட்டிகட்டியாய் விழுதல், மஞ்சள் நிறமாக விழுதல், நடந்தால் இளைப்புக் காணுதல் முதலியவைகளையும் குணப்படுத்தும்.

போலிவிளம்பரங்கள் மலிந்து கிடக்கும் இக்காலத்தில் உண்மை மருந்துகளை விசாரித்தறிந்து வாங்குங்கள்.

24-வேளை பஸ்பம் விலை ரூ. 4—0—0.

## நற்சாட்சி

சுமார் 10-மாதமாய் எனக்கேற்பட்ட இருமல், இளைப்பு, திணறிக்கை, வாந்தி இன்னும் பலவித கஷ்டங்களுடன் என் சரீரமே இந்த வியாதியால் இனி பூலோக வாழ்க்கையை மறந்து எமலோகப் பிரயாணம் தீர்மானித்திருக்கும் சமயம் தங்களிடம் நேரில் வந்து 24-வேளை தாளகபஸ்பம் சாப்பிட்டதில் ஷை கஷ்டங்கள் எல்லாம் நீங்கி பூராவும் குணமாயிற்று. இருமல் கொஞ்சங்கூட இல்லை.

(Sd.) P. S. வெங்கிடகிருஷ்ண அய்யங்கார்,
12—6—34. சீமையெண்ணெய் டிப்போ, ஈரோடு.

---

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி S. I.**

குழந்தையின் தேகசுகம் பெற்றோர்களின் உடல் நிலையைப் பொருத்திருக்கிறது.

ஆகையால்

**வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு**

உள்ளவர்கள்

சி. எம். சாமி

# பிரமேக நிவாரணி

உபயோகியுங்கள்.

இது மகாக்கொடிய வியாதி. இதை ஆரம்பத்திலேயே கவனித்து வைத்தியம் செய்துகொண்டால் எளிதில் சுகமாகும். அப்படியின்றி விட்டுவிடுவதால் மேகம் உள்ளூரப் பரவி எல்லையற்ற தீமைகளை விளைவிக்கும். நாள் செல்லச் செல்ல கைகால் பிடிப்புகளில் மேகநீர் தங்கி வீக்கமும் வலியும் உண்டாகி எழுந்திருக்கவும் வேலைசெய்யவும் முடியாத நிலையில் வந்து முடியும். அப்பொழுது நிவர்த்திப்பது கஷ்டசாத்தியமாகும். பிரபல வைத்தியர்களே இவ்வியாதியை அசைக்கமுடியாதென்றால் சாதாரண வைத்தியர்களைப்பற்றி சொல்லவும் வேண்டுமோ.

இவ்வியாதிக்கென்றே நாங்கள் அதிக பிரயாசையோடு "பிரமேக நிவாரணி" என்ற மருந்தைக்கண்டுபிடித்து எண்ணிக்கையற்ற வியாதியஸ்தர்களுக்குக் கொடுத்துக் குணப்படுத்தியிருக்கிறோம். இது நீர்த்தாரை எரிச்சல், நீர் இறங்கும்போது சுருக்குசுருக்கென்று குத்துதல், நீரோடு விந்து கலந்து விழல், நீர் மஞ்சள் நிறமாயிருத்தல், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, இடுப்புவலி, நீரடைப்பு முதலிய வியாதிகளை அறவே நீக்கி, நீர்த்தாரையிலுள்ள ரணங்களை ஆற்றி பூரண சுகத்தைத் தரக்கூடியது. இதைப்போல் வேறு எந்த மருந்தும் குணந்தராதென்பது நிச்சயம்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2—0—0.

---

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி S. I.**

189923

ன் ஐயா முகவாட்டம்?

## தாது புஷ்டி வேண்டுமா?

அப்படியானால்

சி. எம். சாமி

# மன்மதக் குளிகை

## உபயோகியுங்கள்.

உபயோகித்த தினமே உற்சாகமடைவீர்கள்.

இது அனேக தாதுவிருத்தி மருந்துகளைச் சேர்த்து உயர்ந்த முறைப்படி தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது பலவீனம், சொப்பனஸ்கலிதம், நரம்புத்தளர்ச்சி, ஆயாசம், உடல் நடுக்கம் முதலியவைகளைப் போக்கி வீரியவிருத்தி, தாதுவிருத்தி, ரத்தவிருத்தி, போகசக்தி முதலியவைகளை உண்டாக்கி மன உல்லாசத்தையும், வாலிபத்தையும் தந்து, வயோதிகனை வாலிபனாக்கும் தன்மை வாய்ந்தது. உலக வாழ்க்கையில் ஊக்கமிழந்தவர்களுக்கு ஊக்கத்தைக்கொடுத்து, மெலிந்த உடலைப்புஷ்டியாக்கி, நபுஞ்சகம் என்னும் பேடித்தனத்தை அடியோடு தொலைத்து, நரம்புகளுக்கு வலுவைக்கொடுத்து, மாதர்மனதைத் திருப்திபண்ணி பூரண ஆயுளையும், அற்புத பராக்கிரமத்தையும் தருவதில் இணையற்றது.

சரீரத்தில் உஷ்ணம் தாக்கி பிரமேகவெட்டைச்சூட்டால் வீரியம் கெட்டு தூக்கத்தில் பங்கப்படுவோர்களும், மூத்திர எரிச்சல், துரிதஸ்கலிதம், எலும்புருக்கிநோய் உள்ளவர்களும் துர்ச்செய்கையின் பலனால் ஆணவத்தையே இழந்து அவதிப்படும் ஆடவர்களும் எமது மன்மதக் குளிகையை உட்கொள்வார்களானால் அவர்களின் குறைகள் நீக்கப்பட்டு திடசரீரிகளாய் வீரபுருஷர்களாய் ஆவார்களென்பது திண்ணம்.

சோதனைக்கு ஒரு புட்டி ஆர்டர் செய்யுங்கள்.

20-குளிகை விலை ரூபாய் இரண்டேதான்.



**மலையப்பசாமி வைத்தியசாலை,**

**பழனி S. I.**

# கட்டுரை எழுதுவோர்

## கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

1. விஷயங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் சுத்தமாக மையினால் எழுதப்படவேண்டும். சித்தனில் மூன்று அல்லது நான்கு பக்கங்களுக்குள் அடங்கக்கூடிய விஷயங்கள் முதன்மையாகக் கவனிக்கப்படும்.

2. பிரதி ஆங்கில மாதம் பத்தாம் தேதி பத்திரிகை வெளிவரும். ஆசிரியரால் அங்கீகரிக்கப்படும் கட்டுரைகள் மட்டும் பிரசுரிக்கப்படும்.

3. சித்தனில் பிரசுரமாகும் எல்லா விஷயங்களின் காபிரைட் பிரசுரம் செய்வோர்க்கே உரிமையாகும்.

4. கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கும், அபிப்பிராயங்களுக்கும் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியாகார்.

5. நம்பி பிரசுரிக்கும் கட்டுரைகள் ஏற்கனவே உரிமையாக்கப்பட்டிருந்தால் அதற்குப் பத்திரிகாசிரியர் உத்தரவாதியன்று.

6. கட்டுரைகளை கூட்டவும், குறைக்கவும், ஏற்றுக்கொள்ள மறுக்கவும் பத்திரிகாசிரியருக்கு அதிகாரமுண்டு.

7. அங்கீகரிக்கப்படாத கட்டுரைகளை திருப்பி அனுப்புவதாக உறுதி கூற முடியாது. தபால் தலை அனுப்பினால் மட்டும் திருப்பி அனுப்பப்படும்.

### ஏஜண்டுகள் தேவை.

எமது பத்திரிகைகளை விற்பதற்கு எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதவும்.

விலாசம்:— மானேஜர்,

சித்தன்,

பழனி S.

Regd. No. M. 3210.

எவர்! எவர்!!

## இளமையை விரும்பாதார்?

தளர்ந்தவயதினரும், மெலிந்த உடலினரும்
இழந்த பலமடையச் செய்வது
மகானருளால் கிடைக்கப்பெற்ற எமது
சிறந்த ஔடதமே!

**Permanent Cure.**



**Cure Guaranteed.**

# தங்கபஸ்பம்.

நோயுற்றவர், நோயற்றவர் இருதாரத்தினரும்
உட்கொள்ளலாம்.
தேகசுகம், திடகாத்திரம், தாதுபுஷ்டி
அளிப்பதில் இணையற்றது.
24-நாள் பஸ்பம் விலை ரூ. 10—0—0.

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
பிராஞ்ச:— 1-54, அருணாசல நாய்க்கன் தெரு,
சிந்தாத்திரிப்பேட்டை, மதறாஸ்.

Edited, Printed & Published by Dr. C. P. Sami
at the Nityananda Press, Palni.